பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்


பம்பையே வாங்குங்கள்

# உதயன்

விலை ரூ 2/-

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

When, only The best is Good Enough



Buy Solide Pumps

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸூ ஆடி மீ 17 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 17 ( 01 - 08 - 1988 ) UTHAYAN - A lively Tamil Daily கதிர்: 145

## பன்றியின் இருதயம் மனிதனுக்குப் பொருந்தும்!

லண்டன், ஆகஸ்ட் 1

பன்றியின் உடலுறுப்புக்கள் மனித உடலுக்குப் பொருந்துவதாக லண்டன் வைத்திய நிபுணர்கள் அறிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக மேலும் தெரிய வந்ததாவது:

மிருகங்களின் உடல் உறுப்புக்களை மனிதனுக்குபொருத்துவதற்காக முன்னர் எடுக்கப்பட்டுவந்த வைத்திய ஆராய்ச்சிகள் தோல்வியில்முடிவடைந்தன.

மனித உடல் ஏனைய திசுக்களை ஏற்க மறுத்ததே அதற்குக் காரணம்.

தெற்கு லண்டன் ஆஸ்பத்திரி வைத்திய நிபுணர்கள் குழு கடந்த 6 வருடங்களாக இது குறித்து மேற்கொண்டு வந்த ஆராய்ச்சியின் பயனாக மிருகங்களின் உடலுறுப்புக்களை ஏற்க மறுக்கும் இரண்டு இரசாயனப் பொருள்கள் மனித இரத்தத்தில் இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஜே. வி. பியினர் - கைதிகள் சிறையில் பெரும் மோதல்!

## 2 பேர் மரணம்; 17 பேர் காயம்

கொழும்பு, ஆகஸ்ட் 1

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் ஜே வி. பி. சந்தேக நபர்களான கைதிகளுக்கும், சாதாரண கைதிகளுக்கும் இடையில் பெரும் மோதல் ஏற்பட்டது.

அந்தமோதலில் இரண்டு கைதிகள் கொலையுண்டனர். 17 கைதிகள் படுகாயமுற்றனர்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து, ஜே. வி. பி. சந்தேக நபர்கள் சிறைச்சாலைக் கட்டடத்தில் கறுப்புக்கொடி ஏற்ற முயற்சித்ததைத் தொடர்ந்தே மோதல் இடம்பெற்றதாக ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

இந்தமோதல் சம்பவம் எப்போது நடைபெற்றது என்பது குறித்து ஸ்ரீலங்கா அரசு வட்டாரங்கள் தகவல் தர மறுத்துவிட்டன.

அனேகமாக இலங்கை-இந்திய ஒப்பந்த நிறைவு நாளுக்கு அடுத்த நாளான 30 ஆம் திகதி சனிக்கிழமையே இச்சம்பவம் நடைபெற்றிருக்க வேண்டுமென நம்பப்படுகிறது.

இறந்தவர்களில் ஒருவர் ஜே. வி. பி. சந்தேக நபர் எனவும் அறிவிக்கப்பட்டது.

சிறையில் வைக்கப்பட்டு இருந்த ஜே.வி.பி. சந்தேக நபர்களுக்கும் ஏனைய கைதிகளுக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பு பெரும் மோதலாக உருவெடுத்தது.

ஒப்பந்தத்தின் ஓர் ஆண்டு நிறைவு தின ஹர்த்தாலை ஒட்டி சிறைக் கட்டடத்தில் கறுப்புக்கொடியை ஏற்ற ஜே.வி.பி சந்தேக நபர்கள் முயற்சித்தனர் என்றும்—

அதனை ஏனைய சாதாரண கைதிகள் ஆட்சே

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 'ஹெலி'யிலிருந்து சூடு காயப்பட்டவர் ஆஸ்பத்திரியில்

### கிளிநொச்சியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஆக 1

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் ஹெலிக்கொப்டர் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இச் சம்பவத்தினால் காயத்திற்குள்ளான ஒருவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் சந்தியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மு. செல்வேந்திரன் (37 வயது) என்பவரே காயத்திற்குள்ளானார்.

இவர் அமைதிப்படையினரால் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளார்.

(ஓ-5-10)

## வந்த வேகத்தில் திரும்பிய மக்கள்!

கடந்த இரண்டு நாள் தொடர் ஊரடங்கு உத்தரவு நேற்றுக்காலை தளர்த்தப்பட்டதை அடுத்து யாழ் நகரில் சன நடமாட்டம் சுமாராகக் காணப்பட்டது.

காலையில் சில மணி நேரம் மக்கள் ஊரடங்கு தளர்வு பற்றித் தெளிவாக அறிந்து கொள்ளாததன் காரணமாக வெளியே நடமாட அஞ்சினர்.

எனினும்படிப்படியாக மக்கள் வெளியே நடமாடத் தொடங்கினர்.

நகரில் கடைகள் அனைத்தும் திறக்கப்பட்டன.

வாகன சேவைகளும் நடைபெற்றன.

தூர இடங்களுக்கான பஸ்சேவைகளும் வழமை போல் நடைபெற்றன.

யாழ் ஆஸ்பத்திரியில் நூற்றுக்கணக்கான நோயாளர் சிகிச்சைக்காக வந்திருந்ததையும் நேற்றுக்காண முடிந்தது.

நகரில் கூடிய மக்கள் வந்த வேகத்தில் அலுவல்களை முடித்துவிட்டு உடனடியாக வீடு திரும்பிக் கொண்டிருந்ததையும் காண முடிந்தது.

(ஓ-10)

## ஒப்பந்தம் சரிவர அமுல் செய்யப்பட்ட பின்பே அமைதிப்படை வெளியேறவேண்டும்

### கன்னியாகுமரியில் வைத்து செல்லச்சாமி

இந்திய - இலங்கை ஒப்பந்தம் சரிவர அமுல் செய்யப்பட்ட பின்னரே இந்திய அமைதிப்படை வெளியேற வேண்டும்.

மேற்கு மாகாண அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி நேற்று முன்தினம் கன்னியா குமரியில் செய்தியாளர்மத்தியில்பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அமைதி உடன்பாடு வந்த பின்னர் சுமார் 50 ஆயிரம் அகதிகள் இலங்கை திரும்பியுள்ளனர் அவர்களுக்குத் தேவையான உதவிகளை அரசு வழங்கி வருகிறது.

உடன்பாடு ஏற்பட்டு ஓராண்டு ஆகிய பின்னரும் நிலைமை சீராகாததற்குக் காரணம் தமிழர் அமைப்புக்களிடையே ஒற்றுமையின்மை நிலவுவதே. எனவே தமிழர் அமைப்புக்கள் ஒன்றுபட்டு நிலைமையைச் சீராக்க முன்வர வேண்டும்—

இப்படி திரு. செல்லச்சாமி மேலும் சொன்னார்.

(ஓ எ)

### சுபநேரம்

1 8 1988

ஆடி - 17

திங்கட்கிழமை

சுபநேரம்:
12 03 முதல் 01-33 வரை

ராகுகாலம்:
7-33 முதல் 9-33 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## இறங்குதுறை இறங்கியதால் 30 பேர் பலி!

கோலாலம்பூர், ஆக 1

மலேசியாவில் இறங்குதுறை ஒன்று உடைந்து இறங்கியதால் 30 பேர் உயிரிழந்தனர் 400 பேர் காயமடைந்தனர்.

கோலாலம்பூரில் இருந்து 800 கிலோ மீட்டர் தூரத்தில் பினாங்கில் இச் சம்பவம் இடம்பெற்றது.

(அ-எ)

## மீன் பிடிக்க சென்றவருக்கு சூடு!

யாழ்ப்பாணம், ஆக 1

பண்ணைக் கடலில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் மீது அமைதிப் படையினர் சுட்டதில் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக் காலை 8 மணி அளவில் கோட்டை முகாமிற்குப் பின்னால் உள்ள கடற் பகுதியில் மீன்பிடிக்கச் சென்றவர்கள் மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இச் சம்பவத்தின் போது முதுகில் காயம் ஏற்பட்டு வ. ராசு (வயது 36) என்ற நபர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ஓ-10-51]

## முல்லைத்தீவில் ஷெல் தாக்குதல்!

### ஒருவர் பலி; மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஆக 1

முல்லைத்தீவு "இரண்டாம் திட்டம்" குடியேற்றத் திட்டத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதலின்போது ஒருவர் மரணமானார். மூவர் காயமடைந்தார்கள்.

கடந்த 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நடந்த இச் சம்பவத்தில் இறந்தவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்று தெரியவந்துள்ளது.

இச் சம்பவத்தின் போது காயமடைந்தவர்களில் ஒருவரான பி. கணேசன் (18 வயது) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பன்னிரண்டாம் கட்டை அமைதிப்படை முகாமில் இருந்தே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

[ஓ-5-10]

## யாழ். பல்கலைக் கழக புதிய துணைவேந்தர் யார்?

யாழ்ப்பாணம், ஆக. 1

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கான நியமனம் பற்றிய முடிவு இவ்வாரம் அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ் பல்கலைக்கழக வட்டாரங்கள் உதயனுக்கு இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தன.

கடந்த ஜூலை மாதம் 2 ஆம் திகதி கூடிய பல்கலைக்கழக கவுன்ஸில் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம். மருத்துவப் பீடாதிபதி பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம், கொழும்பு திறந்த வெளிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ். துரைராஜா ஆகியோரது பெயர்களை தெரிவு செய்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சிபார்சிற்கு அனுப்பி வைத்திருந்தது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சிபார்சின்படி இறுதிமுடிவை உயர்கல்வி அமைச்சரான ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இவ்வாரம் அறிவிப்பார் என அறிய வருகிறது.

இது இவ்வாறு இருக்க யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடப் பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் புலமைப் பரிசில் பெற்று மலேஷியா செல்வது குறிப்பிடத்தக்கது

(ஓ-5)

## வடமராட்சியில் அடிக்கடி கேட்ட பெரும் சத்தங்கள்!

வடமராட்சி, ஆக. 1

அறுபது மணி நேர ஊரடங்கு அமுலில் இருந்த வேளையில், வடமராட்சியின் பல பகுதிகளிலும் அடிக்கடி துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன,

குறிப்பாக பருத்தித்துறை, மாத்தனை, திக்கம், இமையாணன், உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் துப்பாக்கிச் சத்தங்கள் அடிக்கடி கேட்ட வண்ணம் இருந்தன. இரவில் ஷெல் சத்தங்களும் கேட்டன. அதனால் மக்கள் பீதியுடன் பொழுதைக் கழித்தனர்.

எனினும் இப்பகுதிகளிலிருந்து பொதுமக்கள் எவரும் காயத்துடன் அனுமதிக்கப்படவில்லை என்று மந்திகை ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்றுக்காலை தெரிவித்தன.

இதேவேளை —

வெள்ளிக்கிழமை அதிகாலை சுமார் 3-30மணியிலிருந்து சுமார் அரை மணி நேரமாக உடுப்பிட்டியில் பலத்த சத்தங்கள் கேட்டன.

உடுப்பிட்டியில் உள்ள படை முகாமின் கிழக்குப் பக்க 'சென்றி' மீது நடத்தப்பட்ட தாக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



உது தான் எதையும் ஒதுக்கித் தள்ளக்கூடாது எண்டு சொல்லுறது. பண்டியும் பல பேருக்கு உயிர் குடுக்கும் போல இருக்குது பார்த்தியளே...! பண்டி எண்டு இனி ஒருத்தரையும் ஏசக் கூடாது...!!

## பிடித்துச் செல்லப்பட்டவர் அஸ்தியாக..

பலாலி, ஆக 1

அமைதிப்படையினரால் பிடித்துச் செல்லப்பட்டவர் பின் மரணமானார் என அறிவிக்கப்பட்டது.

புத்தூரில் வைத்து கடந்த ஞாயிறன்று (24-7-88) பிடித்துச் செல்லப்பட்ட திரு. கணேஸ், அச்சுவேலி நாவற்காட்டைச் சேர்ந்தவர்.

கணேஸ், இறந்த செய்தி, தந்தையார் திரு கந்தப்பிள்ளை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அமுல் தந்த அவலங்களும் சிரமங்களும்!

யாழ்ப்பாணம், ஆக 1

கடந்த வியாழக்கிழமை மாலை 6 மணி முதல் ஞாயிறு காலை 6 மணிவரையான தொடர்ச்சியான 60 மணி நேர ஊரடங்கு அமுல், தளர்வு என்பன குறித்து, போதிய முன்னறிவித்தல், சரியான தகவல் இல்லாமை என்பன காரணமாக, மக்கள் பெரும் சிரமங்களையும், உயிராபத்துக்களையும் எதிர்நோக்க வேண்டி இருந்தது.

இடத்துக்கு இடம்வெவ்வேறு விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் மக்கள் பல இடங்களில் அவதிப்படவும் நேர்ந்தது.

வியாழக்கிழமை மாலை 6 மணியுடன் ஊரடங்கு அமுல் படுத்தப்படுவதாகவும், மறு அறிவித்தல் வரை இது நீடிக்கும் எனவும் யாழ். நகரை அண்டிய பகுதிகளில் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக நகரை அடுத்த பகுதிகளில் ஊரடங்கு பற்றி பொதுமக்கள் அறிய முடியவில்லை. அத்துடன் ஊரடங்கு நேரத்திற்கும் தகவல் கிடைத்த நேரத்துக்கும் இடையில் போதிய அளவில் உணவு, எரிபொருள் என்பனவற்றை வாங்கி வைக்கவும் முடியவில்லை.

மேலும் இந்த ஊரடங்கிற்கான அறிவித்தல்கள் தொலைக்காட்சி, வானொலி என்பவற்றிலும் அறிவிக்கப்படவில்லை இதனால் சனியன்று காலையில் ஊர

(6 ஆம் பகம் பார்க்க)

## புதிதாக அனுமதி பெற்ற பல்கலைக்கழகமாணவர் ஆங்கிலப்பாடநெறி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக 1

1988 ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்கான ஆங்கில பாடநெறி இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. யாழ்மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு வெ. சபாநாயகம் முதல் லிட்டனை யூனியன் கல்லூரியில் காலை 9 30 மணிக்கு வைபவரீதியாக பாடநெறியை ஆரம்பித்து வைப்பார்.

இப்பாடநெறிஆகஸ்ட் மாதம் மூன்றும் வார இறுதிவரை திங்கட்கிழமைதொடக்கம்வெள்ளிவரை தினசரி காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் நடைபெற இருக்கிறது.

ஆகஸ்ட்மாதம் நான்காம் வாரம் தொடக்கம் மாணவர்களுக்கு காலை 8 தொடக்கம் 12 மணி வரை தொழில் அனுபவத் திட்டம் அமுலுக்கு வருகிறது. இவ்வேளையில் தினசரி மாலை 2 30 தொடக்கம் 5 மணி வரை ஆங்கில வகுப்புகள் நடைபெறவுள்ளன.

மேலதிகமாக யாழ். இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், மானிப்பாய் இந்துக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 4 நாட்களின் பின் பரீட்சை

யாழ்ப்பாணம் ஆக 1

நான்கு நாள் இடைவெளியின் பின்னர் இன்று ஜி.சி.ஈ.உயர்தரப் பரீட்சை நடைபெறும்

கடந்த வியாழன், ஞாயிறு ஆகிய தினங்கள் விடுமுறை நாட்களானபடியாலும் வெள்ளி, சனி ஆகிய தினங்களில் நடைபெற வேண்டிய பரீட்சைகளை அரசாங்கம் பின்போட்டிருந்தமையாலும் பரீட்சைகள் நடைபெறவில்லை. (ஓ-5)

## சயனைட் அருந்தி மரணம்

காங்கேசன்துறை, ஆக 1

காங்கேசன் துறைப் பகுதியில் கடந்த 27ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் சயனைட் அருந்தி மரணமானார்.

அன்று காங்கேசன் துறைப்பகுதியைச் சுற்றிவளைத்த அமைதிப்படையினர் பல இளைஞர்களைக் கைது செய்தது தெரிந்ததே.

அன்றைய சம்பவத்தில் ரஜீவன் என்பவர் சயனைட் அருந்தி மரணமானார் என்பது பின்னர் தெரியவந்தது. (ஓ-68)

## முச்சக்கர வண்டிகள்

கடந்த கால அசம்பாவிதங்களின்போது இரண்டு கால்களையும் இழந்தவர்களுக்கு முச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக யாழ். அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் கூறியதாவது.-

ஒரு காலை மட்டும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

English Electric Type writer Silver Reed, Hardly Used, கந்தோர் பாவனைகளுக்கு உகந்தது. விற்பனைக்குஉண்டு. 372, பருத்தித்துறைவீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (5506)

---

நீக்கொண்டிஷன் ஹொண்டா C 50, C 70, C 90, Racoon விற்பனைக்கு உண்டு. திருவாசி, ஸ்தூபி, பெரியமணி, குத்துவிளக்கு, Sports Cups மற்றும் கோயில் பொருள்களும் கிடைக்கும் இடம் S. ஸம்ஸ் 26/B, மானிப்பாய் வீதி, கிளை:- 76/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (5398)

---

GOLDI Sausages எல்லாவகையான Sausages மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கழிவு தரப்படும். Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். [C.5624]

---

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், அலுமாரி, கட்டில், மெத்தைகள், விருந்தைக் கதிரைகள், ஹோல்செற், Show Case, மேசை, கபேட், தையல் மெஷின், கண்ணாடி மேசை, சாப்பாட்டு மேசை, கதிரைகள், பழையயன்னல் நிலைகள், குழாய்க் கிணறு பம்ப், Baby Cot, மற்றும் பல பொருட்கள் மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக்ஸ் சந்தியில்) (5136)

## விடுவளவு விற்பனை

பிரதான வீதியோரமாக, மட்டுவில் நாடு பூனகரியில் (ஆசாரியகுறிச்சி) சிறிய வீடும் (மலசலகூடத்துடன்) 5 பரப்பு மேட்டுக்காணியும், இதனுடன் சேர்ந்த 12½ பரப்பு வயல் காணியும் உடன் விற்பனைக்குண்டு. இத்துடன் மின்சார ஒட்டும் 'ருன்ஸ் போமர்' சாவகச்சேரியில் விற்பனைக்குண்டு. தொடர்பு: வே. துரைசிங்கம் (பாக்கியம்) கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (5504)

## கட்டிடப் பொருட்கள் விற்பனை

வீடு கட்டுவதற்கு உரிய யன்னல், நிலைகள், கதவு நிலைகள், கதவுகள், கூரைக்குரிய சகல மரங்களும் நல்லநிலையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: J. T. வின்சிலோ, C/o Dr. செல்வச்சந்திரன், மானிப்பாய் ரோட், உடுவில். (5511)

## கதவு நிலை விற்பனைக்கு

எங்களிடம் 9 அடி அகலம் 7 அடி உயரம் உடைய நிலையும், கதவும்; திராந்தி. தகடு (6 அடி) ஆகியவை விற்பனைக்குண்டு. தொடர்பு: சைபிக்கிள் சென்ரர் (Cycle Centre) இல. 148, கே.கே. எஸ் ரோட், யாழ்ப்பாணம். (5505)

## காணி விற்பனை

வீடு, வர்த்தக நிலையம் அமைக்கக்கூடிய 2½ பரப்புக்காணி (கிணற்றுடன்) நல்ல சுற்றுடலில் கந்தர்மடம் சந்தியில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: K. S. முத்துலிங்கம் (Royal) நவாலி தெற்கு, மானிப்பாய். (5501)

## WALL PAPER FOR SALE

உயர்ந்த ரக இத்தாலிய நாட்டு (Italy) சுவருக்கு ஒட்டும் வர்ணகடதாசிகள் இரண்டு டிசைன்களில் விற்பனைக்கு உண்டு. கழுவிப்பாவிக்கக் கூடியவை. விபரங்கட்கு; T. ஞானகுரு, 104/4, அத்தியடி குறுக்கு வீதி, அத்தியடி. யாழ்ப்பாணம். (C 5908)

## கோழிக்குஞ்சு

BAIRAHA FARM ஒருநாள் புரொயிலர் சேவல், பேடு குஞ்சுகள் 4-8-1988 அன்று விநியோகிக்கப்படும். முன் கூட்டிப் பதிவு செய்யவும். பாம் ஹவுஸ், கோட் ரோட், மல்லாகம். (5147)

---

Prima Lohmann வெள்ளை, சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் சிவப்பு சேவல் குஞ்சுகள் Hy-Line வெள்ளை கறுப்புப் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன்முன்கூட்டியே பதிவு செய்யவும் Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (C5626)

---

Cull Birds முட்டை இட்டு இளைத்த இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தும் தரப்படும். Nallur Farm Centre, C/o Nallur Video Centre, 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (5068)

## இறைச்சிக்கோழி விற்பனை

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre C/O நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (சி 5625)

## தேவை

கற்பூரம் அடிக்கும் யந்திரம், மெழுகுவர்த்தி அச்சு, மற்றும் கைத்தொழில் சம்பந்தமான யந்திரங்கள் தேவை. அத்துடன், கற்பூரம், சந்தணக்குச்சி, மெழுகுவர்த்தி போன்ற பிற கைத்தொழில் அனுபவம் உள்ளவர்கள் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்: ந. கந்தசாமி 140, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். (C/ 5970)

## மணமகள் தேவை

1. யாழ்/இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த, 28 வயதுடைய, செவ்வாய்க் குற்றமுள்ள, முதிசமுள்ள வெளிநாட்டு வியாபாரம் செய்யும் படித்த மணமகனுக்குப் பெண் தேவை.
2. இந்து/வேளாளர் குலத்தைச் சேர்ந்த மாதம் 5 ஆயிரம் நிரந்தர வருமானமுள்ள, சொந்த வீடு வளவுள்ள, கண்பார்வை குறைந்த, மணமகனுக்கு (வயது 34) பெண் தேவை. சீதனம் கவனிக்கப்படமாட்டா. தொடர்பு: 'ABCDE' விவாகப் பொருத்துனர் 328, நாவலர் ரோட், ஆனைப்பந்தி. (5512)

## பரீட்சை

ஆண்டு 5 மாணவருக்கு இன்று 1 - 08 1988 திங்கள் காலை 9. 00 - 10. 15 கணிதம், 10. 30 - 11. 30 மொழி முன்னோடிப் பரீட்சை நடைபெறும். Modern Education Centre, Karaveddy. (5395)

## வகுப்புகள்

G. C. E. டிசம்பர் பழைய பாடத்திட்டம், சிறுவர் முதல் பட்டதாரிவரை ஆங்கிலம் எழுதப் பேச, ஆசிரியர் கலாசாலை ஆங்கில விரிவுரையாளர் கற்பிக்கின்றார். சங்கீத வகுப்புக்கள், SJCA சிவன் பண்ணை வீதி, கொட்டடி; கலாநிலையம் சித்தன்கேணிப் பிள்ளையார் கோவில் மேற்கு வீதி. (5507)

## O/L 88 ஆங்கிலம்

O/L 88 பழைய/புதிய பாடத்திட்ட ஆங்கிலம் விசேஷ சனி ஞாயிறு வகுப்புக்கள் மற்றும் Spoken English A/L89 ஆங்கில வகுப்புகள், தினசரி காலை மாலை, கனகசபை. 8, ஆரும் ஒழுங்கை, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி, யாழ்ப்பாணம். (5400)

## வினாத்தாள் வகுப்புக்கள்

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள் வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன. புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சை 7-8-88 ஞாயிற்றுக்கிழமை பி. ப 3. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. விண்ணப்ப முடிவுத் திகதி5-8-88. ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. புதிய கல்வி நிலையம் செங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக, யாழ்ப்பாணம். கிளை; களபூமி, காரைநகர். ( 5396)

## கல்வி வகுப்புகள்

O/L Day Classes வடமாகாணத்தில் நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் நடாத்தப்படுகின்றது: விஞ்ஞானம் - R. செல்வவடிவேல், கணிதம் -T. தயாபரன்; சமூகக் கல்வி, வர்த்தகம்-K. S. முத்துலிங்கம், ஆங்கிலம்- தெய்வர்; தமிழ் - பொன். செல்வராசா, Royal Institute, Manipay. (5503)

## கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரையுள்ள வீடுகளில் வந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும். தனித்தனியாகவோ சிறு குழுக்களாகவோ வயது வித்தியாசமின்றி ஆண், பெண் இருபாலாரும் தமது முகவரியுடன் விண்ணப்பிக்கவும். உடன் தொடர்பு கொள்ளப்படும். 175, C/o உதயன், யாழ்ப்பாணம். (5142)

## TYPE WRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna, Samy & Co Shabra அருகாமையில். (C5300)

## மடுத் திருப்பதி யாத்திரை

காவலூர் புனித சிந்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோர்ஸ் (சுருவில் வீதி) நிர்வாகிகளால், தனிப்பட்டவர்களுக்கான, மடுயாத்திரை ஆவணி 12 ஆம் திகதி (பிரயாணத்திற்கு) ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. விரும்பியவர்கள் ஒரு கிழமைக்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளவும். நிர்வாகி, சரம்பொன், காவலூர். (5509)

## சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதகபலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில்விருத்தி, மங்கள மணவாழ்வு, மனையில் இலக்குமி கடாட்சம், நோய்பிணி தீரல், சத்துருஜெயம், முதலான மாந்திரீக விடயங்களுக்கும் நாடுங்கள் 'சக்தி சரவண' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடரும், மட்டக்களப்பு பாரம்பரிய - பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி. (யாழ் / இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (C/5962)

## ரேனியோ - தட்டச்சு

தமிழ் - ஆங்கில தட்டச்சு Typewriting ரேனியோ வேலைகள் மற்றும் சகலவிதமான அச்சுவேலைகளும் சிறந்த முறையில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும். தயா அச்சகம் இல; 138, நாவலர் ரோட், மனோகரா சந்தி, யாழ்ப்பாணம். (C/ 5600)

## விற்பனைக்கு

புதிய T. V. கலர் 20'' சொனி மொடல் K. V. 2090EM.K.IIதொடர்பு நா. நவரெத்தினம் ஆனைக்கோட்டை வீதி, குளப்பிட்டி, கொக்குவில். (5418)

## வீட்டுப்பணியாள் தேவை

வட்டுக்கோட்டையில் ஒரு குடும்பத்திற்கு வீட்டுப் பணியாள் தேவை. 15 வயதிற்கு உட்பட்ட ஆண்-பெண் பிள்ளைகள், வயது வந்த பெண் பிள்ளைகள் அல்லது பொறுப்பற்ற பெண்கள் விண்ணப்பிக்கவும். தொடர்பு: 306, C/o உதயன், யாழ்ப்பாணம். (5513)

---

தொண்டமானாற்றுப் பகுதி குடும்பங்களின் அவலம்:

# நான்கு ஆண்டுகள் கழிந்தும் வீடு திரும்ப முடியாத நிலை

## அரச நிவாரணமும் இல்லை

யாழ்ப்பாணம், ஆக. 1

ஸ்ரீலங்கா இராணுவ காலத்தில் 1984 ஆம் ஆண்டு தொண்டமனாறு வெளிக்கள நிலையம், பாலம் என்பவற்றைச் சூழக் குடியிருந்த மக்கள் சிலர் இன்னும் தமது வீடுகளுக்குத் திரும்ப முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

1984 தைப்பொங்கல் தினத்தன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இப்பகுதியில் முகாம் ஒன்றை அமைத்தனர்.

அப்போது ஏற்பட்ட அசம்பாவிதங்களின் போது வெளியேறியவர்களே இன்னும் அப்பகுதிக்குத் திரும்பமுடியாத நிலையில் உள்ளனர்.

பாதிக்கப்பட்ட ஒருவர் இதுபற்றி உதயன் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:

1984 ஆம்ஆண்டு தைப் பொங்கல் தினத்தன்று தொண்டமனாறு வெளிக்களநிலையம், பாலம் என்பவற்றில் இராணுவத்தினர் புதிதாக ஒரு இராணுவ முகாமை அமைத்தனர்.

அப்போது நடைபெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து அன்மையில் இருந்த நாங்கள் அனைவரும் அகதிகளாக வெளியேறினோம்.

அப்போது எமக்கு எதுவித நிவாரணமோ, உதவிகளோ அரசாங்கத்தால்வழங்கப்படவில்லை.

1986இல் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தொண்டமனாற்றுக் கிராமத்தைச் சுற்றி வளைத்ததைத் தொடர்ந்து அக்கிராம மக்கள் அனைவரும் அகதிகளாக வெளியேறினர்.

அவ்வாறு வெளியேறியதும் நிவாரணம் அரசினால் வழங்கப்பட்டது.

அந்த வகையில் எமக்கும் நிவாரணம் வழங்கப்பட்டது.

இப்போது பெரும்பாலானமக்கள் தொண்டமனாற்றில் மீளக் குடியேறியுள்ளதால் நிவாரணம் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும் அன்றில் இருந்து இன்றுவரை நாம் அகதிகளாகவே உள்ளோம்.

எம்மைப்பற்றி எவரும் கருத்தில் கொள்வதாகத் தெரியவில்லை.

வீடுவாசல், காணி அனைத்தையும் விட்டு நான்கு ஆண்டுகளாக அகதிகளாக இருந்து அல்லலுறும் நாம் இலங்கை இந்திய ஒப்பந்தம் வந்தபிறகாவது எமது வீடுகளில் குடியிருக்க அனுமதிக்கப்படுவோம் என எதிர்பார்த்தோம்.

எல்லாமே பகற்கனவு ஆகிக்கொண்டிருக்கிறது.

இராணுவத்தினர் தொண்டமனாற்றிலுள்ள எமது வீடுகளை விட்டுப் போகிறவர்களாக இல்லை.

ஒன்றில் அரசாங்கம் எம்மை வீடுகளில் குடியிருக்க அனுமதிக்கவேண்டும். அல்லது வீடுகளுக்குச் சென்று குடியிருக்கும் வரை நிவாரணம் வழங்கவேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ26)

# குழந்தைகள் - முதியோர் எமது இரு கண்கள்

ஊர்காவற்றுறை, ஆக 1

குழந்தைகளையும் முதியோரையும் எமது இரு கண்களென மதித்து நாம் அவர்களைக் காக்க வேண்டும். அவர்களை மகிழ்விப்பதன் மூலமே நிறைவான வாழ்வைப் பெறலாம். இவ்வாறான விளையாட்டுப் போட்டிகள்குழந்தைகளை துடிப்புள்ளவர்களாக மாற்றும்.

சுருவில் பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அதிபர் பொ.திரு. சோமசுந்தரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுருவில் பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு பாடசாலைக் குழுத் தலைவர் திரு. வே. ச. அந்தோனிப்பிள்ளை தலைமை வகித்தார்.

இலங்கை கிராமிய மீளமைப்பு நிறுவனத்தின் சார்பாக செல்வி. பெ. மல்விகாதேவி கலந்துகொண்டு சிறப்பித்தார். (இ-16)

## விசாரணையும் விடுவிப்பும்

தாளையடி, ஆக 1

தாளையடி, மருதங்கேணி ஆகிய இடங்களில் உள்ள ஆண்களை அமைதிப்படையினர் கடந்த புதன்கிழமை மருதங்கேணிச் சந்திக்கு அழைத்துச் சென்றனர்.

சில மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்த பின்னர் அவர்கள் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். (ஒ-144)

## தொழில் நுட்ப பயிற்சி வகுப்பு ஆரம்பம்

கொடிகாமம், ஆக.1

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் தொழில் நுட்பப் பயிற்சி வகுப்பு ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

தொழில்நுட்ப வல்லுநர் திரு. ஜே. டி, அரியநாயகம் பயிற்சி வழங்கி வருகிறார்.

60 மாணவர்கள் இப்பயிற்சி வகுப்பில் சேர்ந்துள்ளனர்.

திருநாவுக்கரசு மகாவித்தியாலய கொத்தணி அதிபர் திரு. ச. சின்னத்தம்பி பயிற்சி வகுப்பை அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றினார். (இ-75)

## முகாமுக்கு முட்கம்பி வேலி

வேலணை, ஆக.1

மண்டைதீவு சந்தியில் அமைந்துள்ள இந்திய அமைதிப்படையினரின் முகாம் பலப்படுத்தப்பட்டு வருகின்றது.

முட்கம்பி வேலி போட்டு முகாம் பலப்படுத்தப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. (ஒ-167)

## கோமாரி அபாயம்

காரைநகர் ஆக. 1

காரைநகரின் யாத்திரவையிலும் (சிவன் கோவில் பக்கம்) கோமாரியின் அறிகுறிகள் தெரிவதாகக் கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். மாடுகள் சில திடீரென இறந்துள்ளன. (இ-73)

## பாண் பாவனையாளர் புகார்

கோப்பாய் ஆக. 1

கோப்பாய் வடக்குப் பகுதியிலுள்ள சில கடைகளில் பாண் சுகாதார முறைப்படி மூடி விற்கப்படுவதில்லையாம்.

இதுபற்றி பொது சுகாதாரப் பரிசோதகரிடம் இப்பகுதி மக்கள் முறையிட்டுள்ளனர். (இ- 72)


# தேவை

எமது நிறுவனத்திற்கு தமிழ் ரைப்பிங் தெரிந்த பெண் லிகிதர் தேவை. தகுதியானோர் தகுந்த நற்சாட்சிப் பத்திரங்களுடன் 1 - 8 - 88 காலை 10-00 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(A.S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)
(C 5979)

CONSTRUCTION & DEVELOPMENT COMPANY LTD.
37, S. D. Jayasinghe Mawatte,
NUGEGODA.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு குவைத்

விவசாயப் பண்ணையில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை.

கொழும்பு முகவரினால், நேரடியாக இங்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.

3 போட்டோப் பிரதிகளுடன் தகுதியானவர்கள் கீழ்வரும் முகவரிக்கு

03-08-88, 04-08-88

தினங்களில் நேரடியாகச் சமுகம் அளிக்கும்படி வேண்டப்படுகிறீர்கள்.

சம்பளம்: 37 K.D. (1 K.D —ரூபா 112)
ஒப்பந்தம்: 2 வருடங்கள்.

பிரயாண ஒழுங்குகள் இரு வாரங்களில் மேற்கொள்ளப்படலாம். பிரயாணக் கட்டணம் விசாவின் பின் அறவிடப்படும்.

தொடர்பு விலாசம்:-
No. 9, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(C 5974)

# தொழிலாளர் தேவை

யாழ்நகரில் இயங்கி வரும் பொறியியல் நிறுவனத்துக்கு பின்வரும் பதவிகள வெற்றிடமாக உள்ளன.

- ✶ வார்ப்பு வேலை (வார்ப்பிரும்பு, பித்தளை, அலுமினியம்)
- ✶ கடைச்சல் வேலை
- ✶ ஒட்டுனர், பொருத்துனர்.

ஒவ்வொரு துறைகளிலும் சகல அனுபவமுள்ளோர்

9-8-88ற்கு முன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு முகவரி:
யுனிரெக் பொறியியல் நிறுவனம்
61, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்:
(5412)

வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான

# கம்பியூட்டர் கல்வி

Computer Programming in Basic Language
ஆரம்பம் : 3 - 8 - 88
திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்
பயிற்சிக்காலம் : 40 நாள்
கட்டணம் : ரூபா 750/-
(இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)
O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
கூடிய நேர செய்முறைப் பயிற்சி
AMSTRAD (MICRO COMPUTER), E G 2000 (P C), COMMODORE
கம்பியூட்டரில் வழங்கப்படும்.
பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

DIPLOMA IN COMPUTER PROGRAMMING
COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC AND COBOL LANGUAGE
பயிற்சிக்காலம்: 6 மாதம்
குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவு செய்யவும்.

UNIKCO COMPUTER CENTRE
No: 5 மின்சார நிலைய வீதி,
2, ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(உப தபாற் கந்தோர் அருகாமை)
(C 5844)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## 1. Saudi Arabia: சவூதி அரேபியா:

### Saudi Operation & Maintenance Company Limited

S. O. M. C.

| | | |
|---|---|---|
| 1. Electrician | — | SR 600 |
| 2. Mechanic | — | SR 600 |
| 3. A/C. Technician | — | SR 700 |
| 4. Electrical Engineer | — | SR 2000 |
| 5. Plumber | — | SR 600 |
| 6. Drivers | — | SR 600 |
| 7. Masons | — | SR 600 |
| 8. Carpenters | — | SR 600 |
| 9. Eletronic Technician | — | SR 700 |
| 10. Telephone Technician | — | SR 600 |
| 11. Telephone Operator | — | SR 700 |
| 12. Power Plant Operator | — | SR 700 |
| 13. Power Plant Mechanic | — | SR 700 |
| 14. Power Plant Electrician | — | SR 700 |
| 15. Painter | — | SR 600 |
| 16. Welder | — | SR 600 |

### Saudi Arabia

Maintenance Workers

| | | |
|---|---|---|
| 1. Work Controler | — | 1100 = 100 |
| 2. Work Settuler | — | 1100 = 100 |
| 3. Material Controler | — | 800 = 100 |
| 4. Have Split Units Technician | — | 900 = 100 |
| 5. Appliance Technician | — | 700 = 100 |
| 6. T. V. Repairman | — | 700 = 100 |
| 7. Carpenter / Locksmith | — | 600 = 100 |
| 8. Plumper | — | 600 = 100 |
| 9. Painter | — | 500 = 100 |
| 10. Jeniter | — | 300 = 100 |
| 11. H.I. Duty Driver | — | 600 = 100 |
| 12. Mechanic Helper | — | 400 = 100 |

Age 21 — 47 Year

நேர்முகப் பரீட்சைக்கு

10-8-88 கொழும்பு சென்று
20-8-88 க்குள் பிரயாணம் செய்யலாம்.

யாவரும் ஆங்கில அறிவு திறமையுடைய வர்களாகவும், 4 வருட அனுபவம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

## 2. Kuwait: குவைற்:

### United Shiping Company Cleaners

300 Vacancies - Salary 30 K.D

Age 21 — 48 வரை

| | | |
|---|---|---|
| 1. A. C. மெக்கானிக் | — | 60 K.D. |
| 2. மாபிள் கல்லுப் பதிப்போர் | — | 60 K.D. |
| 3. பேணிச்சர் காப்பென்ரர் | — | 60 K.D. |

WITH FOOD ALLOWANCE

FLIGHT: 15-9-88 க்கு முன் பயணம்

மேற்படி விபரம் அறிய உடன் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

### T.V. TRAVELS & TOURIST

BROWN ROAD, (Railway Station Front) KOKUVIL.

(C 8952)


தமிழ்ப் பகுதியில் மட்டும் சுற்றிவளைப்பு ஏன் ?

# சிங்களப் பிரதேசத்திலும் தேடுதல் நடத்துங்கள்

## திருமலை பிரசைகள் குழுத் தலைவர் கோரிக்கை

திருகோணமலை, ஆக.01

'திருகோணமலை சந்தைப் பகுதிக் குண்டு வெடிப்புக்குக் காரணமானவர்களைக் கண்டு பிடிப்பதற்கு சந்தையை அண்டியுள்ள சிங்களப் பகுதியில் சுற்றிவளைப்பும் தேடுதலும் நடத்துங்கள்.'

திருகோணமலை மாவட்ட பிரசைகள் குழுத் தலைவர் திரு. பி. விஜயநாதன், இந்தியப் படையின் திருமலை பொறுப்பதிகாரிக்கு எழுதியுள்ள கடிதத்தில் இப்படிக் கோரியிருக்கிறார்.

மேற்படிகுண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து திருகோணமலை நகர்ப் பகுதியில் தமிழர்கள் வதியும் இடங்களை, இந்தியப் படையினர் திடீர் திடீரென சுற்றிவளைத்துத் தேடி வருகின்றனர். சிங்களவர்கள் வசிக்கும் பகுதிகளில் இத்தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இது தொடர்பாகவே திரு. விஜயநாதன் இந்தியப்படை அதிகாரிக்கு அந்தரங்கமான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார்.

குண்டு வெடிப்புக்குத் தமிழ்த் தீவிரவாதக்குழு ஒன்று பொறுப்பாக இருக்கலாம் என்று கூறப்பட்டாலும், சிங்களப் பகுதியில் — தமிழர் அதிசம் செல்லாத பிரதேசத்தில் — இக் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்திருக்கின்றது. ஆகவே சிங்களவர்களே இச்சம்பவத்திற்குக் காரணமாக இருக்கலாம் என்ற நிலைப்பாட்டையும் ஒதுக்கிவிட முடியாது.

எனவே திருகோணமலை மத்திய வீதிக்கு அப்பால், வடகரை விதிப்பக்கமாக ஹட்டன் நாஷனல் வங்கி தொடக்சம் உள்ள பகுதிகளிலும்—

அதற்குப் பக்கத்தில் கடற்கரை ஓரத்துடன் உள்ள ('பப்ப') பிரதேசத்திலும்—

திருகோணமலை கோட்டைக்கு வெளியேயும், உள்ளேயும் சுற்றிவளைப்பு, தேடுதல் நடத்தும்படி கோருகின்றேன்.

— இப்படி திரு. விஜயநாதன் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## புனர்வாழ்வு அமைச்சின் சுற்றறிக்கைக்கு ஆட்சேபம்

புதுக்குடியிருப்பு, ஆக. 1

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு இலவச உணவுப்பொருள் வழங்குவது தொடர்பாக கட்டுப்பாடுகளை விதித்து புனர்வாழ்வு அமைச்சினால் அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரசைகள் குழுவும் பொது ஸ்தாபனங்களுமே இந்த ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளன.

இந்தியாவில் இருந்து மீளக் குடியேறுபவர்களுக்கு 6 மாத நிவாரணம் வழங்குகிறது புனர்வாழ்வு புனர் நிர்மாண அமைச்சு.

ஆனால் இங்கு நடந்த வன்முறைச் சம்பவங்களின்போது மிகுந்த பாதிப்புக்குள்ளாகியவர்கள் நாங்கள். சொந்த நாட்டிலேயே நாம் அகதிகள் ஆனோம். மாறி மாறி இடம்பெயர்ந்து குடியிருந்த எமக்கு மட்டும் புனர்வாழ்வு அமைச்சு இவ்வாறான பாரபட்சங்களைக் காட்டி சட்டுப்பாடுகளை விதிப்பது புரியாததாக உள்ளது.

இவ்வாறு அவர்கள் தமது ஆட்சேபத்தில் தெரிவித்துள்ளனர்.

(ஒ-126)

## சைக்கிள் திருடனுக்கு 'பூசை'!

பண்டத்தரிப்பு, ஆக.1

சைக்கிள் திருடன் ஒருவன் பண்டத்தரிப்பு சந்தையில் வகையாக மாட்டிக்கொண்டான்.

சைக்கிள் உருளாதவாறு கயிற்றால் கட்டி விட்டுச் சந்தைக்குள் சென்று வீட்டுத் தேவைக்கான சாமான்களை வாங்கிக்கொண்டு சைக்கிள் உரிமையாளர் வந்தபோது திருடன் 'பாருடன்' பின் சில்லைச் சேர்த்துக் கட்டிய கயிற்றை அவிழ்த்துக்கொண்டிருந்தானாம்.

அப்போது கையும் மெய்யுமாக அகப்பட்ட திருடனை சைக்கிள் உரிமையாளரும் மற்றவர்களும் நையப் புடைத்தனராம்.

(ஒ-120)

## ஊர்வலம் நடத்தக் கோரிக்கை

காங்கேசன்துறை ஆக.01

வடக்கு கிழக்கில் இன்று இருக்கும் அமைதியற்ற சூழ்நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து அமைதியை தோற்றுவிப்பதற்குசாத்தியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி ஊர்வலம் ஒன்றை நடத்த வேண்டும்.

வலி-வடக்கு பிரஜைகள் குழுக்களின் ஒன்றியம் வடக்கு, கிழக்குபிரஜைகள் குழுக்களிடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் சட்டத்தரணி வி. எஸ். கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற சங்கத்தின் பொதுக் கூட்டத்திலேயே இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நிறைவேறிய மற்றும் தீர்மானங்கள் வருமாறு:-

★ அசம்பாவிதங்களால் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த 2000 ரூபா நிவாரண உதவி அரசினால் நிறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் இந் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

★ புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக செயற்படுத்தப்படும் பிரதேச அபிவிருத்தித் திட்டம் குறித்து பொதுஜன அபிப்பிராயம் கோரப்படாதது மக்களின் கருத்தை அறிய வாய்ப்பு இல்லாமல் போவதால் இதற்கு பொதுஜன அபிப்பிராயத்தைக் கோரவேண்டும்.

(இ-68)

## சித்திரத் தேர்

சாவகச்சேரி, ஆக 1

கல்வயல் பெருங்குள அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஐந்து லட்ச ரூபா செலவில் புதிய சித்திரத்தேர் ஒன்று உருவாக இருக்கிறது. (ஒ-31)

## சேவையின் சிறப்பை உணர்ந்து ஆசிரியர்கள் கடமை ஆற்றவேண்டும்

சிறிய சமுதாயத்தை அமைக்கும் சிற்பிகளாக விளங்குபவர்கள் ஆசிரியர்கள். தமது சேவையின் சிறப்பை உணர்ந்துஆசிரியர்கள் கடமையாற்றவேண்டும். கடமையை உணர்ந்து சேவையாற்றும் ஆசிரியரைச் சமுதாயம் இலகுவில் மறந்துவிடாது,

உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் பல ஆண்டுகள் ஆங்கில ஆசிரியையாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ள ஆசிரியை திருமதி எச். எஸ். இரத்தினத்துக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரவிழாவில் பேசிய அதிபர் திரு. வி. யோகீஸ்வரன் இப்படிக் கூறினார்.

பாடசாலை ஆசிரிய நலன்புரிக்கழகத்தலைவர் செல்வி புனிதவதி கந்தையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஆசிரியர் திரு. ச. தியாகராசா, திருமதி ஐ. எஸ். சண்முகரத்தினம், திருமதி அருந்ததி உருத்திரராசா ஆகியோரும் பேசினர்.

திருமதி ஜெயா விசுவலிங்கம் கழகத்தின் சார்பாக திருமதி இரத்தினத்துக்கு அன்பளிப்பு ஒன்றை வழங்கினார்.

(இ-99)


### THE BRIGHT INSTITUTE

ARIALAI, JAFFNA.

90 A/L ஆரம்பம்: 05-08-88

| | |
|---|---|
| பொருளியல்:- | உதயன் |
| கணக்கியல்:- | சிறீகாந்தன் |
| வர்த்தகவியல்:- | சூசைரட்ணம் |
| அளவையியல்:- | யுகபாலசிங்கம் |
| தமிழ்:- | குழந்தை |
| இந்துநாகரிகம்: | காரைசுந்தரம்பிள்ளை |
| தூய/பிரயோககணிதம்: | குணசிங்கம் |
| பௌதிகவியல்:- | நந்தகுமார் |
| இரசாயனவியல்:- | செல்வா |

89 A/L ஒருவருட வகுப்புகள்

SPOKEN ENGLISH

நடைபெறுகின்றன

(5563)


## திருமலைக் குண்டு வெடிப்பையடுத்து

# கோட்டை சிங்கள அகதிகள் தமிழரை தாக்கத் தொடங்கினர்

திருகோணமலை ஆக. 1

திருகோணமலை சந்தையில் கடந்த 21ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் குண்டு வெடித்த கையோடு திருகோணமலைக் கோட்டையில் வைத்து நான்கு தமிழர்கள் குரூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். மற்றொரு தமிழர் காணாமல் போனார். வேறு ஒரு சிங்களவர் தவறுதலாக தமிழர் என அடையாளம் காணப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்டார்.

கொலை செய்யப்பட்ட இரு தமிழர்களின் சடலங்கள் இரண்டு நாட்களின் பின் கடலில் இருந்து மீட்கப்பட்டன.

திருகோணமலைக் கோட்டைக்குள் அமைந்திருக்கும் கோணேஸ்வரர் ஆலயத்திற்கும் கச்சேரிக்கும் சென்றவர்களே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டனர்.

கோட்டைக்குள்ளும், கோட்டை அருகில் உள்ள பகுதியிலும் தஞ்சம் புகுந்திருக்கும் சிங்கள அகதிகளே தமிழர்களைத் தாக்கிக் கொலை செய்ததாக கச்சேரியில் இருந்து சம்பவத்தை நேரில் பார்த்த கச்சேரி ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

வி. குணசீலன் (வயது 25)- திருஞானசம்பந்தர் வீதி, என். மகேந்திரன் (வயது 42)- வித்தியாலயம் வீதி ஆகியோரும் வேறு இருவருமே வெட்டிக் கொல்லப்பட்டனர். கடலில் மிதந்த இந்த இருவரினதும் சடலங்களை அவர்களது உறவினர்கள் சனிக்கிழமை காலையில் கண்டெடுத்து தகனம் செய்தனர்.

இந்த இருவரில் ஒருவர் பெண். இவர் கோணேஸ்வரர் ஆலயத்திற்குக் கும்பிடச் சென்றவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் ஹஸ்கிஸன் வீதியைச் சேர்ந்த ஈஸ்வரபாதம் என்பவர் இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்துக் காணமற் போயுள்ளார்.

இவரது சைக்கிள் இரத்தக் கறைகளுடன் கோட்டை வாசலுக்கு அருகே- சிங்கள அகதிகள் தங்கியுள்ள முகாமுக்கு வெளியே- அநாதரவாகக் கைவிடப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது.

இதே சமயம் அம்பலாங்கொடையைச் சேர்ந்த ஸி.ரி. ஆனந்த என்ற சிங்களவர் தமிழர் எனத் தவறுதலாக அடையாளம் காணப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்டார்.

மகேந்திரன், குணசீலன் ஆகியோரின் சடலங்களுடன் இவரின் சடலமும் ஒன்றாகக் காணப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்படாத வேறு சில தமிழர்கள் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்

தாக்குதல் சம்பவங்களை அடுத்து திருகோணமலைக் கச்சேரிக்குள்ளும், கோணேஸ்வரர் ஆலயத்திற்குள்ளும் சிக்கிப் போன தமிழர்களை இந்திய அமைதிப்படையினர் சென்று மீட்டு வந்தனர்.

திருகோணமலை கோட்டைப் பகுதியில் தஞ்சம் புகுந்திருக்கும் சிங்கள அகதிகளுக்குப் பாதுகாப்பாக கோட்டைக்குள் முகாமிட்டிருக்கும் இலங்கை இராணுவத்தினர் செயற்பட்டு வருவதும்-

கோட்டைக்குள் இந்திய அமைதிப்படையினரின் முகாம் எதுவும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## பயிற்சிகள்

அறவழிப் பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான விடுமுறை கால தொடர் பயிற்சிகள் இன்று முதலாம் திகதி ஆரம்பமாகும்.

கைதடி நுணாவில் கண்டி வீதியில் உள்ள அறவழி வாழ்வு நிலையத்தில் இது நடைபெறும்.

அறவழிப் போராட்டக் குழுவின் தலைவரும் கல்வி இயக்குநருமான திரு. வி. எஸ். துரைராசா தலைமையில் ஆரம்பமாகும் இப்பயிற்சியில் திரு. கா. சிவத்தம்பி கலந்து விரிவுரைகள் வழங்குவார். (ஒ-31)


இதோ!

உங்கள் பிரபல்ய போஷாக்கு நிறைந்த

# லீடா

முழு ஆடைப்பால்மா

வசதியான பக்கட்களில்




விநியோகஸ்தர்கள்,
மில்லர்ஸ் லிமிடெட்
த. பெ. இல: 100,
கொழும்பு - 1

400 கிராம் பககட் ரூ. 29/90
1 கி. கிராம் பக்கட் ரூ. 85/=
2 கி. கிராம் பக்கட் ரூ. 162/=

லீடா இப்பொழுது ஓர்குடும்பத்தின் அங்கம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலக்கியப் படைப்பு சிறக்க இலக்கியப் பயிற்சி அவசியம்

## கல்முனை நூல் வெளியீட்டு விழாவில் கவிஞர் நுஃமான் உரை

அம்பாறை, ஆக. 1 இலக்கியப் படைப்புக்கள் சிறந்து விளங்குவதற்கு இலக்கியப் பயிற்சிமிகவும் அவசியம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளரும், கவிஞருமான கலாநிதி ஜனாப் எம். ஏ. நுஃமான் மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனை ''வியூகம்'' இலக்கிய அமைப்பின் இரண்டாவது வெளியீடான திரு. உமா வரதராஜனின் ''உள் மன யாத்திரை'' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா அண்மையில்நடைபெற்றது.

இந்த விழாவில் விமர்சன உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கவிஞர் திரு.மு. சடாட்சரம் தலைமையில், கல்முனை உவெஸ்லி உயர்தரப்பாடசாலை மண்டபத்தில் விழா நடைபெற்றது.

ஜனாப் நுஃமான் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது–

எப்பொழுதும்ஓர் நல்ல இலக்கியம்வாழ்க்கையை ாம் பார்க்க மறுக்கும் ருகோணத்தை காட்டுகின்றது. இது வாழ்க்கையைப் புரிய உதவுகின்றது.

பிற இலக்கிய வடிவங்களை விட சிறுகதை இலக்கியம் தமிழில் ளர்ச்சி அடைந்திருக்கின்றது.

சிறுகதைகள் சம்பவப் பின்னலை அடிப்படையாகக் கொண்டதாகவும், சம்பவப் பின்னலுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மனநிலைகளை விபரித்துச் சொல்வதாகவும் இருவகையில் எழுதப்படுகின்றன.

இந்த வகையில் திரு. உமாவரதராஜனை முக்கிய சிறுகதைப் படைப்பாளியாக நான் காண்கின்றேன்''

இப்படி அவர் கூறினார்

கிழக்குப் பல்கலைக்கழகப் பதிவாளரும், இலங்கை இஸ்லாமிய நூல் வெளியீட்டுப்பணியகத்தலைவருமான ஜனாப் எஸ். எச். எம். ஜெமீல் உரையாற்றுகையில்,

'' ஒரு இலக்கிய வடிவம் நீடித்திருக்குமா என்பது காலத்தால் நிர்ணயிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

ஒருகாலத்தில் கவிதைகளில் வாழ்ந்த இலக்கியம் இன்று உரைநடையில் வளர்கின்றது.

புதுமைப்பித்தன் வழியில் நடந்துகொண்டிருக்கும் கதாசிரியன் திரு. உமா வரதராஜன் ''— என்றார்.

களுவாஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபரும், எழுத்தாளருமான திரு. அன்புமணி ''அலை'' ஆசிரியர் திரு அ. யேசுராசா, வண சகோதரர் திரு. எஸ். ஏ.ஐ. மத்தியூ (அதிபர்) ஆகியோரும் உரையாற்றினர்.

(இ-14)

## உடுப்பிட்டி கொள்ளை: பொருள்கள் மீட்பு

வடமராட்சி, ஆக. 1 உடுப்பிட்டியில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த கோஷ்டி ஒன்று இளைஞர்களிடம் வகையாக மாட்டிக் கொண்டது.

இக் கோஷ்டியினரால் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் ஒரு பகுதியும் மீட்கப்பட்டது. இக் கோஷ்டியினரின் ஒப்புதல் வாக்குமூலங்களையும் இளைஞர்கள் பெற்றுக் கொண்டனர்.

கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களில் எஞ்சியவற்றை இந்தியாவில் விற்றுவிட்டதாக கொள்ளையர்கள் ஒப்புக் கொண்டனர்.

மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இவர்கள் எச்சரித்து விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ - ஒ - 160)

## மாடுகள் இறக்கின்றன

தாளையடி ஆக, 1 வடமராட்சி கிழக்கில் உள்ள கிராமங்களில் தொடர்ந்தும் மாடுகள் இறந்தவண்ணமிருக்கின்றன.

கோமாரி நோய்க்கான தடுப்பூசி அப்பகுதியில் இன்னமும் ஏற்றப்படவில்லை. (ஒ-144)

## நிவாரணம்

திருகோணமலை, ஆக 1 புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படும் நிவாரணப் பணமான 2, 000 ரூபா திருகோணமலையைச் சேர்ந்த சுமார் 1, 118 பேருக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

இத்தகையவர்களுக்கு மூன்று மாதத்திற்கு பங்கீட்டுப் பொருள்களும் வழங்கப்படும்.

(ஒ -150)



கல்முனை ''வியூகம்'' இலக்கிய அமைப்பின் வெளியீடான திரு. உமா வரதராஜனின் ''உள்மன யாத்திரை'' சிறுகதைத்தொகுதி வெளியீட்டுவிழா கல்முனை உவெஸ்லி உயர்தரப்பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ''அலை'' ஆசிரியர் திரு. அ. யேசுராசா விமர்சன உரையாற்றுவதை படத்தில் காணலாம். (இ-14)

(படம் அம்பாறை மாவட்டச் செய்தியாளர்)

## இப்படியும் தண்டனை,...

தும்பளை வாசிகள் சிலருக்கு அமைதிப்படையினர் மொட்டையடித்தனர் எனக் கூறப்படுகிறது.

ஊரடங்கு நேரத்தில் சட்டத்தை மீறும் வகையில் நடந்துகொண்டமைக்காகவே இவர்களுக்கு இத்தண்டனை வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(உ-ஒ-160)

## திருமலை அரச அலுவலகங்களை கோட்டைக்கு வெளியே மாற்றுக!

### சிங்களவரல்லாத ஊழியர் அரச அதிபருக்கு மகஜர்

திருகோணமலை, ஆக 1 திருகோணமலை பிரெட்ரிக் கோட்டைக்குள் உள்ள கச்சேரி மற்றும் அரசு அலுவலகங்களை வெளியே இடம் மாற்றம் செய்யும்படி சிங்களவரல்லாத அரசு ஊழியர்கள் அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக மகஜர் ஒன்றை திருகோணமலை அரச அதிபருக்கு அவர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

இது சம்பந்தமாக தீர்மானம் எடுக்கப்படும் வரை, திருகோணமலை நகரில் உள்ள உதவி அரச அதிபர் அலுவலகத்தில் வரவைப் பதிந்து வருவதாகவும் தமிழ் ஊழியர்கள் அறிவித்துள்ளனர்.

மகஜர் வருமாறு:

★ அமைதி ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் திருமலையில் ஏற்பட்ட வன்செயல்களைத் தொடர்ந்து சிங்கள அகதிகள் கச்சேரிக் கட்டடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் சிங்களவரல்லாத அரச ஊழியர்கள் கோட்டைக்குள் உள்ள அரச அலுவலகங்களுக்குச் சென்று பணியாற்றத் தயங்கினர்.

சிங்களவரல்லாத ஊழியருக்கு ஒன்றுமே நடக்காது என்று நீங்கள் தந்த உத்தரவாதத்தைத் தொடர்ந்து. பயமுறுத்தல் மத்தியிலும் பணியாற்றச் சம்மதித்தோம்.

★ சென்ற 22 ஆம் திகதி கோட்டைக்கு வெளியே உள்ள பந்துல ஹோட்டலில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து பொதுமக்கள் கொல்லப்பட்டனர். கோட்டைக்குள் வன்செயல்கள் தொடர்ந்தன. சிங்களவரல்லாத அரச ஊழியர்களைச் சிங்கள அகதிக் கும்பல் தாக்க முயற்சித்தது.

இதனால் சிங்களவரல்லாத அரச ஊழியர், இலங்கை இராணுவத்தினரதும் இந்திய அமைதிப்படையினரதும் பாதுகாப்புடன் கோட்டை நுழைவாயில் வரையும் பின்னர் இந்திய அமைதிப்படையினரின் பாதுகாப்புடன் நகருக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இனவாதமற்ற கட்சியால்தான் ஐ. தே. கட்சி அரசை பதவியிலிருந்து இறக்க முடியும்

### ஐக்கிய சோஷலிச அணி அறிக்கை

கொழும்பு, ஆக 1 இனவாதம் அற்ற பரந்தஜனநாயகக்கட்சி ஒன்றினாலேயே ஐ. தே. க. அரசை பதவியில் இருந்து வெளியேற்ற முடியும் என்று ஐக்கிய சோஷலிச அணி தெரிவித்திருக்கிறது.

அணிச் செயலாளர் திரு. டி. சி. ராஜா கொலுரே விடுத்த அறிக்கையில்.

அப்படியான ஜனநாயக இயக்கம் ஒன்றை நடத்தக்கூடிய தகுதி எமது அணிக்கே உண்டு– என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் நடந்து முடிந்த நான்கு இடைத் தேர்தல்களில் யு. என். பி. யைத் தோற்கடிக்க சுதந்திரக் கட்சி தவறிவிட்டது குறித்து யு. என். பி. சந்தோஷமடையத் தேவையில்லை என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ - எ)

## டாங்கிகள் திரும்பின

தாளையடி, ஆக. 1 வடமராட்சி கிழக்கில் உள்ள கிராமங்களில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கைகள் கடந்த வார மத்தியில் முடிவுற்றன.

தேடுதல் நடவடிக்கைக்காக அப்பகுதிக்குக் கொண்டுவரப்பட்ட துருப்புகளும், டாங்கிகளும் திரும்பி விட்டன.

மூன்று நாட்களாக அப்பகுதியைச் சுற்றிவளைத்து அமைதிப்படையினர் தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

(ஒ-144)

## 15 மாணவர் தேரிவு

காங்கேசன்துறை, ஆக.1 தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலிருந்துமாணவர்கள் கலைப்பிரிவுக்கும், 10 மாணவர்கள் வர்த்தக பிரிவுக்கும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளனர்.

கடந்தகால வன்செயல்களால் இக்கல்லூரி மிகவும் மோசமாக சேதமுற்று 16 வகுப்பறைகள் கல்வி கற்க முடியாத நிலையிலும் கல்வித்துறையில் முன்னணி வகிப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-68)

மக்கள் முகம்

## வலி வடக்கு பிரஜைகள் குழு ஒன்றியம்

காங்கேசன்துறை ஆக. 1 வலி. வடக்கு பிரஜைகள் குழுக்கள் ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தெல்லிப்பழை ப. நோ. கூ. ச. மண்டபத்தில் நடைபெற்ற சமயம் புதிய நிர்வாகிகள் தெரிவாகினர்.

தலைவர் திரு. வி. எஸ். கணேசலிங்கம், உப தலைவர் திரு. க. தங்கலிங்கம், செயலாளர் திரு. எஸ். சிவமகாராசா, உப செயலாளர் திரு. எஸ். அரிச்சந்திரா, பொருளாளர் திரு. அநு. வை. நாகராஜன், கணக்கு பரிசோதகர் திரு. என். தவநாதன்.

கல்வியதிகாரி திரு. ஆர். கே. குலசேகரன் தலைமையில் கல்விக் குழுவும், திரு. வை. பொன்னையா தலைமையில் விவசாய அபிவிருத்தி குழுவும், திரு. க. தங்கலிங்கம் தலைமையில் மீன்பிடி அபிவிருத்தி குழுவும், திரு. வி. எஸ். கணேசலிங்கம் தலைமையில் குடிசை அமைப்பு குழுவும் தெரிவு செய்யப்பட்டன. (இ-68)

## ஓராண்டு நினைவஞ்சலி



### தியாகராசா ஸ்ரீசுப்பிரமணியம்

(மண்டபம் கேம்பிலும், ஆனையிறவு உப்பளத்திலும் உயரதிகாரியாகப் பணியாற்றியவர்)

உதயம்: 19- 4- 1921 அஸ்தமனம் 12- 8- 1987

திதி:- 1- 8- 1988

குடும்பத்தின் மூத்தவரே,
குலமகனாய் ஒளிர்ந்தவரே
வேகுதையா உள்ளம்
வெந்துருகி சாகுதையா
கள்ளமில்லா மனதாலே
எம்மைக் கவர்ந்தவரே
நிலையில்லா இவ்வாழ்வு பொய்யென்றும்
எல்லாம் என்றோ முடிந்த காரியமென்றும்
எண்ணி எங்களை விட்டு
பிரிந்தீர்களோ ஐயா!

நீங்கள் மறைந்து ஓராண்டானாலும் உங்கள் பாசமுள்ள நினைவுகள் எங்களைவிட்டகலாதையா. உங்கள் ஆத்ம சாந்திக்காக தினமும் எங்கள் பிரார்த்தனைகள்.

6 ஆம் ஒழுங்கை பலாலி வீதி, யாழ்ப்பாணம். — அன்பு மனைவி, மக்கள் மருமக்கள், பேரப்பிள்ளைகள் அன்பு மாமி

(5555)

# ''எதிர்க்கட்சிகளின் 'அவியல்' கூட்டணி; மக்கள் என்றுமே ஏற்கமாட்டார்கள்''

## ராஜீவ் தாக்கு

புதுடில்லி, ஆக. 1 ''கொள்கை அளவில் ஒற்றுமை இல்லாத எதிர்க்கட்சிகளின் 'அவியல்' கூட்டணியை மக்கள் என்றுமே ஏற்கமாட்டார்கள்'' என பிரதமர் ராஜீவ் கூறியுள்ளார்.

ஸ்பெயின் நாட்டில் வெளிவரும் 'எல்பெயிஸ்' என்னும் பத்திரிகைக்கு ராஜீவ் பேட்டி அளித்துள்ளார். அதில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் கூறியதாவது:-

மத்தியில் காங்கிரசை கவிழ்க்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு எதிர்க்கட்சிகள் செயல்படுகின்றன. மற்றப்படி அவர்களிடம் நிலையான, ஒற்றுமையான கொள்கைகளோ கருத்துக்களோ கிடையாது. கருத்து ஒற்றுமை இல்லாத ஒரு அவியல் கூட்டணியை மக்கள் என்றும் ஏற்கமாட்டார்கள்.

திடமான கொள்கைகள் இல்லாத நிலையில் காங்கிரஸ்மீது ஊழல் குற்றச்சாட்டுகள் கூறுவது எதிர்க்கட்சிகளுக்கு பழக்கமாகி விட்டது. இந்த குற்றச்சாட்டுகளுக்கு எவ்வித ஆதாரமோ அடிப்படையோ கிடையாது. குறிப்பாக வலதுசாரி கட்சிகள் குற்றம் சாட்டுவதையே தொழிலாகக் கொண்டுள்ளன. காரணம் அவர்களுக்கு வேறு வேலை எதுவும் கிடையாது.

இதனால் நம் நாட்டில் ஊழலை இல்லை என்று நான் கூறவில்லை. 70கோடிமக்கள்கொண்ட இந்தியா போன்ற பிரமாண்டமான நாட்டில் ஊழலே இல்லாமல்இருப்பது சாத்தியமல்ல. ஊழலை அறவே ஒழித்துக்கட்டுவது என்பதும் லேசான காரியம் அல்ல. எனினும் எல்லா மட்டங்களிலும் ஊழல் அகற்ற காங்கிரஸ்பாடுபட்டு வருகிறது.எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளை உதாசீனம் செய்யாமல் முடிந்த வரையில் நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்.

எனினும் அரசியல் ஆதாயம் மற்றும் விளம்பரம் கிடைப்பதற்காக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் அடுக்கப்படுவதை நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம்.

இவ்வாறு ராஜீவ் கூறினார்.

'காங்கிரஸ் அல்லாத மாற்று ஆட்சிவர வாய்ப்பு உள்ளதா?' என்று கேட்டதற்கு அவர் கூறியதாவது: [illegible] காலத்தில் இருந்து முக்கியமான பல அடிப்படைக் கொள்கைகளைக் கொண்ட ஒரேகட்சி காங்கிரஸ். இந்தப்பாதையில் இருந்து நாங்கள் என்றும் விலகியதில்லை. உள்நாட்டில் ஜனநாயக, சோசலிச மத சார்பற்ற கொள்கைகளையும், உலக அமைதி, ஒற்றுமை, ஒத்துழைப்பு ஆகிய கருத்துக்களை சர்வதேச அளவிலும் ஆண்டாண்டு காலமாக நாங்கள் வலியுறுத்தி வருகிறோம.

இதுபோன்ற உருப்படியான கொள்கைகள் ஏதாவது எதிர்கட்சிகளிடம்உள்ளதா? 77-79 இல் ஜனதா ஆட்சியின் பயங்கர தோல்விக்குப்பிறகு மீண்டும் அது போன்ற மாற்று ஆட்சியை அமைக்க மக்கள் நிச்சயம் விரும்ப மாட்டார்கள். அதுவும் நாட்டின் உள்ளேயும் வெளியேயும் பெரும் சவால் [illegible] இந்நேரத்தில் மாற்று ஆட்சி உருவாக சாத்தியம் இல்லை'' இவ்வாறு ராஜீவ் கூறினார்.

பஞ்சாப் பிரச்சினை பற்றி ராஜீவ் பதில் அளிக்கையில் [illegible] ஒடுக்கிய பிறகு அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தி சட்டத்திற்கு உட்பட்ட தீர்வைக்காணுவோம். பஞ்சாப் தீவிரவாதிகளுக்கு வெளிநாட்டு உதவி கிடைக்கிறது என்பது உறுதியாகி விட்டது. பொது மக்கள் அவர்களுக்கு எப்போதும் உடந்தையாக இருந்ததில்லை. இன வெறி, மத கிளர்ச்சியை தீவிரவாதிகள் தூண்டுகின்ற நேரத்தில் இந்து சீக்கிய, முஸ்லீம் குடும்பங்கள் அவற்றுக்கு பலி ஆகாமல் தைரியமாக நின்று போராடுவது ஆறுதல் தரும் விஷயம்'' என்று கூறினார்.

சீனாவுடன் ரஷ்யா நெருங்கிப் பழகுவது இந்தியாவுக்கு பெரும் தலைவலியாக இருக்கிறது என்ற நிருபரின் குற்றச்சாட்டை பிரதமர் மறுத்தார். 'ரஷ்ய-சீன நட்புறவைப்பற்றி இந்தியாவுக்கு கவலை இல்லை. சீனாவுடன் உள்ள கருத்து வேறுபாடுகளை நீக்கி பரஸ்பர ஒத்துழைப்பு. நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவே இந்தியா விரும்புகிறது'' என்று அவர் மேலும் கூறினார். (எ-4)

டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

Grant BJK&E PFL 1157

தினமும் டியூரோல்® அருந்துங்கள்.
அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லீ.

Pfizer

சில்லறை விலை ரூ.39/90 200 மி. லீ.

ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
அங்கணத்துள் உக்க அமிழ்தற்ருல் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல்.

**பொருள்:**
தம் இனத்தவர் அல்லாதவரின் கூட்டத்தின் முன்னர் ஒரு பொருள் பற்றிப் பேசுதல், தூய்மையில்லாத முற்றத்தில் சிந்திய அமிழ்தம் போன்றது.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805 22703
யாழ்ப்பாணம்.
01-08-1988 த. பெ. இல. 23

## விரும்புவது அதுவே!

அறுபது மணிநேரமாக வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்துவிட்டு, நேற்றுக் காலையில் வீட்டை விட்டு வெளியே வந்தபோது புதிய உலகத்தில் பிரவேசிப்பது போன்ற ஓர் உணர்வு. அன்றாட அலுவல்களை தமது வசதிப்படி செய்து வந்தவர்களுக்கு சிறைவாசம் அனுபவித்தது போன்ற உணர்வு ஏற்படாமல் இருக்க நியாயமில்லை.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காகத் தான் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்படுவது வழக்கம். சட்டத்தைப் பேணும் பிரசைகள், அந்த உத்தரவுக்கு உட்பட்டு, அதனைப் பேணி நடப்பார்கள்.

எனினும் ஊரடங்குச் சட்ட அமுல் மக்களின் நாளாந்த வாழ்க்கையைப் பாதிக்கிறது என்பதை எவரும் மறுத்து விடலாகாது.

ஆகையால், ஊரடங்கு உரிய முறைப்படி, அவதானத்தோடு அமுல் செய்யப்படுவது மிகவும் பிரதானம். வன்செயல் எதுவும் நடக்காமலே, முன்பாதுகாப்புக் காரணங்களுக்காக நடைமுறையாகும் தொடர் ஊரடங்கு குறித்து மக்களுக்கு போதிய முன்னறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும். அதே போல ஊரடங்கு நீக்கப்படுவது குறித்தும் தக்கபடி நேரகாலத்துடன் அறிவிக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஜூலை 28 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரைக்கும் அமுலில் இருந்த அறுபது மணி நேர ஊரடங்கு அமுல் குறித்தும், நீக்கம் குறித்தும் பலபகுதிகளில் போதிய முன்னறிவிப்புகள் இல்லை. வானொலி, தொலைக்காட்சிகள் மூலமாவது முன்னேற்பாடாக அறிவிக்க ஏற்பாடு செய்யப்படவில்லை. திடீர் அறிவிப்புகள் மக்களுக்குப் பல வசதியீனங்களைத் தோற்றுவித்தன.

தொடர்ச்சியான ஊரடங்கு, மக்களின் நாளாந்த வாழ்க்கையை மட்டுமன்றி, பிரதேசத்தின் பொருளாதாரத்தையும் பெரிதும் பாதிக்கும். பகலில் அமுல் செய்யப்படும் ஒரு மணிநேர ஊரடங்கு தானும், பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பைக் கொண்டு வரும்.

எனவே, ஊரடங்கு அடிக்கடி அமுல்படுத்தக் கூடியது அல்ல. ஒரே தொடர்ச்சியாக அதனை நடைமுறைப்படுத்துவதும் தவிர்க்கப்பட வேண்டியது.

ஊரடங்கு உத்தியோகபூர்வமானதாயினும் சரி, உத்தியோகப்பற்றற்றதாயினும் சரி, அதனை அடிக்கடி அமுல் நடத்தும் வழக்கத்தை இயன்றவரை தவிர்த்தல் நல்லது. அது மக்களுக்குப் பல தொல்லைகளை விளைவிக்கும், பாதிப்புகளை உண்டாக்கும் "சமாச்சாரம்" என்பதை மனதில் வைத்துக் கொண்டு அதிகாரிகள் முடிவுகளைச் செய்வதே விரும்பத்தக்கது.

கண்டதற்கெல்லாம் ஊரடங்கு என்ற நிலையை மாற்ற வேண்டும். மிகமிக அவசியம் எனக் கருதப்படும் வேளைகளில் மட்டுமே ஊரடங்கு அமுல் என்ற நிலைப்பாட்டை அவர்கள் கைக்கொள்ள வேண்டும்.

அடிக்கடி ஊரடங்கு என்பது மக்களின் நாளாந்த வாழ்க்கையிலும் அவர்களை அடிமைப்படுத்துவது என்ருகிவிடும்.

அடிக்கடி ஊரடங்கு வராமல் இருக்க சமாதானமும் அமைதியும் தேவை. அந்த அமைதியை உண்டாக்குவதற்கு இராணுவ நடவடிக்கைகள் எல்லாப் பக்கங்களாலும் நிறுத்தப்பட வேண்டும். அதற்கு நீண்ட நாட்களாக மக்கள் கோரும் யுத்த நிறுத்தம் உடனடித் தேவை. அதுவே உண்மை நிலை.

ஊரடங்குக்குப் பதில் யுத்த நிறுத்தம்; அதைத் தொடர்ந்து பேச்சுவார்த்தை: பேச்சுவார்த்தையின் பலனுச் சமாதானம்; அதன் பிரதிபலனுக உரிமைகளுடன் கூடிய அமைதி; அதனையே தமிழ் மக்கள் இந்தியாவிடம் இருந்து எதிர்பார்க்கிருர்கள்; விரும்புகிருர்கள். ஊரடங்குகளை அல்ல.

## வளைகுடா யுத்த நிறுத்தப்பேச்சுக்கள் நம்பிக்கை தருவதாக தகவல்

ஐ. நா. ஜூலை 31

வளைகுடாவில் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வரும் பேச்சுக்கள் நம்பிக்கையளிப்பனவையாக இருப்பதாக ஐ. நா. பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் தெரிவித்தார்.

ஈரான், ஈராக் வெளியுறவு அமைச்சர்களுடன் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்திய பின்னர் பொதுச் செயலாளர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வருவது சம்பந்தமாக இரண்டு அமைச்சர்களும் தங்கள் யோசனைகளை அப்போது சமர்ப்பித்தனர்.

யுத்த நிறுத்தம் நிரந்தரமானதாக இருக்க வேண்டும்; இரு தரப்பும் நேரடிப் பேச்சுக்களை யுத்த நிறுத்தம் ஒன்று வருவதற்கு முன்னர் நடத்தவேண்டும் என்று ஈராக் அமைச்சர் ஐ. நா பொதுச் செயலாளரைக் கேட்டுக் கொண்டார்.

நேரடிப் பேச்சுகளுக்கு முன் நிபந்தனை எதுவும் இருக்கக் கூடாது என்றும் ஈராக் அமைச்சர் தெரிவித்தார்.

ஈரானே, யுத்தநிறுத்தத்துக்கு முன்னுல் நேரடிப் பேச்சுக்களை நடத்த முடியாது என்று தெரிவித்துள்ளது.

யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் நேரடிப் பேச்சுக்களை நடத்துவது குறித்து தனக்கு ஆட்சேபனை இல்லை என்று ஈரான் வெளிநாட்டமைச்சர் வேலாயட்டி தெரிவித்தார்.

இந்த நிலையில்,

ஐ. நா பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் ஆருவது தடவையாக ஈரான் வெளிநாட்டமைச்சருடன் இன்று பேச்சுக்களை நடத்தவிருக்கிருர். (எ)

### பிரிட்டிஷ் பிரதமரின் தென் கிழக்கு விஜயம்!

லண்டன், ஜூலை 31

பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தாட்சர் தென் கிழக்கு நாடுகளுக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கிருர்.

முதல் கட்டமாக பஹ்ரைன், ஓமான் நாடுகளுக்கு விஜயம் செய்த பிரதமர் தாட்சர் நேற்று (சனி) சிங்கப்பூருக்குச் சென்ருர்.

இறுதிக் கட்டமாக அவுஸ்திரேலியாவுக்கு அவர் விஜயம் செய்வார். (எ)

### ஹங்கேரி பிரதமரின் அமெரிக்க விஜயம்

ஹங்கேரிப் பிரதமர் கிரோஸ் அமெரிக்க அதிபர் றேகனை வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

இரண்டு மணித்தியாலம் பேச்சுக்கள் இடம் பெற்றது.

ஹங்கேரியில் இடம் பெற்று வரும் பொருளாதார, அரசியல் சீர்திருத்தங்கள் பற்றி இரண்டு தலைவர்களும் ஆராய்ந்தனர்.

ஹங்கேரிப் பிரதமரின் புதிய சிந்தனைகள், திறந்த மனப்பான்மை ஆகியன தன்னைக் கவர்ந்ததாக அதிபர் றேகன் பேச்சுக்களின் முடிவில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (எ)

## கட்டார் - அமெரிக்க உறவு முறிந்தது

வாஷிங்டன், ஜூலை 31

வளைகுடா நாடான கட்டாருடனுன ராஜதந்திர, இராணுவ, பொருளாதாரத் தொடர்புகளை அமெரிக்கா முறித்துக்கொண்டது.

அமெரிக்கத் தயாரிப்பான ஸ்ரிஞ்ஞர் ஏவுகணை ஒன்று கட்டார் எப்படிப் பெற்றது என்பது குறித்து ஏற்பட்ட தகராறு காரணமாகவே அமெரிக்க அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

ஆப்கன் கெரில்லாக்களுக்கு அமெரிக்கா வழங்கிய ஸ்ரிஞ்ஞர் ஏவுகணைகளில் ஒன்று ஈராக் ஊடாக கட்டாருக்குக் கிடைத்தது என்று அமெரிக்கா நம்புகிறது.

அந்த ஏவுகணையைத் திருப்பித் தரும்படி அமெரிக்கா, கட்டார் அரசைக் கேட்டது. கட்டார் அதனை நிராகரித்து விட்டது. (எ)

### பணவீக்கம்

வாஷிங்டன், ஜூலை 31

அமெரிக்காவில் பணவீக்கம் கடந்த ஆறு ஆண்டுகளிலும் பார்க்க 4.7 சதவீதமாக அதிகரித்துள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

### புதுடில்லியில் வாந்தி பேதி

புதுடில்லி மாநகரில் வாந்திபேதி நோயினுல் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 159 ஆக அதிகரித்தது.

## ஆயுதம் வாங்குவது குறித்துசவூதியின் கொள்கை

சினுவிடம் இருந்து மட்டுமல்ல, வேறு நாடுகளிடமிருந்தும் சவூதி அரேபியா ஆயுதங்களை வாங்கும் என்று அறிவிக்கப்பட்டது

சவூதிஅரேபியா மன்னர் பஹ்த் தொலைக்காட்சியில் உரை நிகழ்த்துகையில் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்கா ஆயுதங்களை வழங்க மறுக்குமாஞல் சவூதிஅரேபியா இக்கொள்கையைத்தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்றும் மன்னர் அறிவித்தார் (எ)

**வெளி உலகில்**

## பிரிட்டனில் 'கறுப்பர்' ஆக்கிரமிப்பாம்!

லண்டன், ஜூலை 31

பிரிட்டனில் 'கறுப்பர் ஆக்கிரமிப்பு' இடம் பெறுவதாக காமன்ஸ் சபையில் நேற்று குற்றஞ் சாட்டப்பட்டது.

கன்ஸவர்வேட்டிவ் எம்பி ஒருவரே இக்குற்றத்தைச் சுமத்தினர்.

இதைத் தொடர்ந்து காமன்ஸ் சபை உறுப்பினர்களாக நான்கு கறுப்பு இனத்தவர்கள் உபசபாநாயகரிடம் முறையிட்டனர் ஒரு கறுப்பு உறுப்பினர்;

'நாமாக பிரிட்டன் வரவில்லை. இங்கு அழுகல் வேலைகளைச் செய்ய நீங்கள் முன்வராத நிலையில், அவற்றைச் செய்ய நீங்கள் எம்மை அழைத்து வந்தீர்கள். இப்போது 'கறுப்பர் ஆக்கிரமிப்பு' என்று கூறுவதா?'

பிரிட்டனின் புதிய குடியேற்றச் சட்டம் பற்றிய விவாதத்தின் மீதே இந்த வாக்குவாதம் இடம் பெற்றது.

ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வர உள்ள புதிய குடியேற்றச் சட்டத்தின் படி 1973க்கு முன்னர் பிரிட்டனில் குடியேறியவர்கள், தங்கள் மனைவி, குழந்தைகளை அழைத்து வரும் உரிமையை இழக்கின்றனர். (எ)

## அரிசனங்களுக்கு ரஜனீஷ் யோசனை

புனே, ஜூலை 31

"அரிசனங்கள் தமது சட்டுப்பாடுகளில் இருந்து விடுபட ஆழ்நிலைத் தியானம் செய்யலாம்" என்று ரஜனீஷ் சுவாமியார் யோசனை தெரிவித்துள்ளார்.

ரஜனீஷ் மேலும் கூறியதாவது:

அரிசனங்கள் என்ருல் கடவுளின் குழந்தைகள் என்று பூரி சங்கராச்சாரியார் கூறி இருக்கிருர். இந்துக்களில் ஒரு பிரிவான அவர்களை தீண்டத்தகாதவர்கள் என்று அவர் கூறுகிருர். அப்படிப்பார்க்கும் போது இந்துக்கள் அனைவரும் தீண்டத்தகாதவர்கள் என்று தான் பொருள்கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனென்ருல் அவர்களும் கடவுளின் குழந்தைகள் தானே?

தக்க வரவேற்பு இல்லாத கோவில்களுக்குச் செல்வதை அரிசனங்கள் தவிர்க்கவேண்டும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்பும் தாம் தீண்டத்தகாதவர்கள் என்ற எண்ணத்துடன் வாழ்ந்து வரும் அரிசனங்கள், கட்டுப்பாடுகளைத் தகர்த்துக் கொண்டு வெளியே வர வேண்டும். இந்த கட்டுப்பாடுகளை அரசியல் வாதிகளால் ஒரு போதும் தகர்க்க முடியாது. எனவே இந்த விஷயத்தில் அரசியல்வாதிகளை அரிசனங்கள் நம்பக் கூடாது.

அரிசனங்கள் தம் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளில் இருந்து வெளியே வர ஆழ்நிலைத் தியானம் செய்யலாம். அதன் மூலம் அவர்கள் மீண்டும் பழைய பெருமையை அடையலாம். இதற்காக ரஜனீஷ் ஆசிரமம் எப்போதும் திறந்தே இருக்கிறது.

இவ்வாறு ரஜனீஷ் கூறினுர். (எ-4)

## 'நாடகக் கலையை மட்டுமன்றி கல்வியையும் வளர்த்தவர்'

### கலையரசு நினைவு தினத்தில் உரை

மானிப்பாய் ஆக. 1

லோட்டன் குடும்பத்தினர்தான் படப் பிடிப்புக்கலையை மானிப்பாய் பகுதியில் புகுத்தியவர்கள். லோட்டன் குடும்பத்தில் பிறந்த கலையரசு சொர்ணலிங்கம் நாடகக் கலையை மட்டுமல்ல கல்வியையும் வளரவைத்தார். பழைய நல்ல காரியங்களை இது போன்ற வைபவங்கள் மூலம் புதிய கலைமுறையினருக்கு அறிமுகப்படுத்துவது அவசியம்.

மானிப்பாயில் நடைபெற்ற கலையரசு சொர்ணலிங்கம் ஞாபகார்த்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய திரு. டபிள்யூ. ஜீ. ஏ. அன்வப்பா இவ்வாறு கூறினுர்.

கலையரசு சொர்ணலிங்கத்தின் ஞாபகார்த்த விழா மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றத்தின் ஆதரவில் மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலையில் நடைபெற்றது.

மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவர் திரு. பொ. செல்வரத்தினம் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்தார்.

திரு. எஸ் ரி. அரசு உரையாற்றுகையில்கூறியதாவது:-

தீபபழக்கம் எதுவுமே இல்லாதிருந்து கலைஞர்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று முன்மாதிரியாகவாழ்ந்து காட்டியவர் கலையரசு சொர்ணலிங்கம்.

எத்தனை இடர் வந்த போதும் நாடகக்கலையை சளைக்காது வளர்த்தவர் எங்கெங்கு கலைஞர்கள் வாழ்ந்தனரோ அவர்களுடன் தொடர்பு கொண்டு நாடகக்கலை வளர உறங்காது உழைத்தவர்.

இப்படி அவர்கூறினுர்.

கலையரசாருடன் நாடகங்களில் பங்கேற்று நடித்த கலைஞர்களில் சிலர் நாடகப் பகுதிகளையும், ஹாஸ்யங்களையும்பாடல்களையும் மேடையில் செய்து காண்பித்தனர்.

திரு. க. சிவரத்தினம் நன்றி கூறினுர். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (இ-90)

### அறிமுக விழா

ஆலயமணி சஞ்சிகையின் அறிமுக விழா இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு புங்குடுதீவு பெருங்காடு சிவன் கோவில் மீனுட்சி அம்பிகை சந்நிதியில் நடைபெறுகின்றது.

இந்த விழாவிற்கு வழக்கறிஞர் ப. கதிரவேலு தலைமை வகிப்பார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி நா. சுப்பிரமணியஐயர் திரு. கனகசபாபதி நாகேஸ்வரன், கவிஞர் சு. வில்வரெத்தினம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்த செஞ்சொற் கொண்டல் இ. ஜெயராஜ் உறவுரை நிகழ்த்துவார்.

விழா இறுதியில் ஆலய [illegible] புலவர் ஈழத்துச்சிவானந்தன் பதிலுரை நிகழ்த்துவார்.

### திருமலை அரச.....

(4 ஆம்பக்க தொடர்ச்சி)

குள் கொண்டு வந்து விடப்பட்டனர்.

★ கோட்டைக்குள் உள்ள அலுவலகங்களுக்கு அலுவல் பார்க்கச் சென்ற பொதுமக்களும் தாக்கப்பட்டனர். கோணேஸ்வர ஆலயத்துக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய சிலரைக் காணவில்லை என்று கூறப்படுகிறது.

★ கோட்டைக்குள் இருந்தும் வெளியில் இருந்தும் அரசு ஊழியர்களுக்கு சிங்கள அகதிகளினால் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. சிங்களவரல்லாத அரசு ஊழியர் வேலைக்குத் திரும்பினுல் கொல்லப் படுவார்கள் என்பதே அந்தப் பயமுறுத்தல்.

கோட்டைக்குள் சென்ற பலர் பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டுத் தாக்கப்பட்டார்கள். இவற்றை நேரடியாகக் கண்ட சாட்சிகள் உள்ளன. இவ்வளவும் கோட்டைக்குள் உள்ள பாதுகாப்புப் படையினர் (ஸ்ரீலங்கா) பார்த்து இருக்கவே இடம் பெற்றன

★ கோட்டைக்குள் இருக்கும் அலுவலகங்களில் பணிபுரியும் சிங்களவரல்லாத அரசு ஊழியருக்கு முற்று முழுதாகப் பாதுகாப்பு இல்லை என்பதை இவை நிரூபிக்கின்றன.

ஆகவே சிங்களவரல்லாத அரசு ஊழியர் பொதுமக்களின் நன்மை கருதி கோட்டைக்கு வெளியே அலுவலகங்களைச் செயல்பட வைக்கும்படி கோருகின்ருேம்.

இது குறித்து ஒரு தீர்மானம் எடுக்கும் வரை நாளில் உள்ள உதவி அரச அதிபரின் அலுவலகத்தில் [illegible] இல் கூறப்பட்டு உள்ளது. (ஒ-எ)

## திருக்குறள் படிக்கக் கூடிய வசதிகளை நூல்நிலயங்கள் செய்ய வேண்டியது அவசியம்

சுன்னும் ஆகஸ்ட் - 1

மக்களிடையே நற்பழக்க வழக்கங்களை வளர்க்கவும். சிறுபராயத்திலிருந்தே பிறருக்கு உதவும் நற்பண்புகளை சிருர்களுக்கு உணர்த்தவும் சன சமூக நிலையங்கள் சிறப்பாக தொண்டாற்ற முடியும். வான்புகழ்கொண்ட வள்ளுவன் தந்த திருக்குறளைச் சகலரும் உணர்ந்து படிக்கக்கூடிய வசதிகளை நூல்நிலையங்கள் செய்தல் அத்தியாவசியமானது. அம்பேத்கார் சனசமூக நிலையம் சுன்னுகத்தில் அரிய பலசேவைகளை செய்வது பாராட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய பல்கலைக்கழக மாணவர்

### யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆங்கிலப்பயிற்சி பெறுவோர் விவரம்

யாழ்ப்பாணம், ஆக.1

இவ்வருடத்தில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு விசேஷ ஆங்கிலப் பயிற்சி வழங்கப் படவுள்ளது அதற்காக ஆறு நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

ஆறு பயிற்சி நிலையங்களிலும் கற்பதற்கு தெரிவான மாணவர் பட்டியல் உதயனில் தொடர்ந்து வெளியிடப்படுகிறது.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பயிற்சி நிலையத்தில் ஆங்கிலம் பயில இடம் ஒதுக்கப்பட்ட மாணவர் விவரம் வருமாறு:-

**பொறியியல் - I**

1. பி. பாலகுமாரன்-கந்தர்மடம், 2. ரி. ஞனசீலன்-யாழ்ப்பாணம், 3. என். கதிர்காமநாதன் - கந்தர்மடம், 4. எஸ். பிரபாகரன்-நல்லூர், 5 சி. ஆர். ரவீந்திரன் - திருநெல்வேலி, 6. ஏ. சந்திரேயந்திரன்-ஆனைப்பந்தி, 7. பி. சிவகுமரன் - வவுனியா, 8. எஸ். சிவராம்-கேண்டாவில், 9. ஆர். டி. இராஜசேகரன் - யாழ்ப்பாணம் 10. எஸ் என். ரவிக்குமார் - கொக்குவில்.

**பொறியியல் - II**

1. ரி. கௌரிதரன்-கொக்குவில், 2 எஸ் ஜீவானந்தன-வேலணை. 3 எம். கே. சாந்தகுமார் - சுண்டுக்குளி, 4 ஆர். கே. சுரேஷ்-கோண்டாவில்.

**உயிரியல் விஞ்ஞானம்**

1. எஸ். அனுஷா-நல்லூர், 2. வி. காண்டீபன் - உரும்பராய், 3. எஸ். முகுந்தன-திருநெல்வேலி, 4. எம். நிரஞ்சனி - திருநெல்வேலி, 5 என். நிர்த்தனன்-உரும்பராய். 6. எம். பிரபாகரன் - யாழ்ப்பாணம், 7. எஸ். சாந்திதேவி - உரும்பராய், 8. கே. சிவராஜா-யாழ்ப்பாணம். 9. எஸ் சிவராம்-நல்லூர், 10- ரி. சுபாநந்தி - கொக்குவில், 11. என். சுகாமதி-உரும்பராய், 12யூ. துரைசாமி - யாழ்ப்பாணம். 13. என். வாசுகி-யாழ்ப்பாணம், 14 கே. வதனி-திருநெல்வேலி, 15. கே. கீதா-கோண்டாவில்.

**கலை, வர்த்தகம்**

1 பி ஆர். அந்தோனிப்பிள்ளை- பாஷையூர் 2 டி. பாலசுப்பிரமணியம்-கரம்பன், 3. வி. சந்திரிகா - அரியாலை, 4. வி. இந்திரகுமார்-வளலாய், 5. கே ஜெனித்தாதேவி-யாழ்ப்பாணம், 6 எம். ஆர். ஜோசப் வின்சன்-குருநகர், 7. எம். கலைவாணி-நல்லூர், 8 எஸ் குணேஸ்வரி-நாரந்தனை, 9 ஏ. டிமரிஸ்டெல்லா-மண்டைதீவு, 10. ஜே எஸ். மைக்கல் கொலின்ஸ்-நாவாந்துறை,

11 பி பதுமா - நயினுதீவு. 12. ஐ. பிரேமராணி- அரியாலை, 13. கே. புஸ்பராணி- வவுனிக்குளம். 14. எல். ஈ. ராம்குமார்-ஊர்காவற்றுறை, 15. ஜெ பி. சகாயராஜ்- கொட்டாஞ்சேனை, 16 எஸ் சத்தியபாமா-நயினுதீவு. 17 கே. சிவசக்தி- யினுதீவு, 18 எஸ் ஸ்ரீநிவாசன்- நந்தாவில், 19 பி சுகந்தினி-கோப்பாய், 20 ஜி. எப். பி. சுரேஷ்வரன் - கொழும்புத்துறை 21 எஸ் உமைபாலன்-மண்டைதீவு, 22. எச். சி வசந்தன்-கொழும்புத்துறை, 23 எஸ். வாசுகி-நாயன்மார்க்கட்டு, 24. எஸ். அசஸ்ட்மன் சேவியர்-அடம்பன், 25. பி. வாசபதி-திருநெல்வேலி, 26 ஆர். கிருபலிங்கம்-அரியாலை, 27 என் ஆர். மரியாம்பிள்ளை - யாழ்ப்பாணம். 28 கே. உதயகுமாரன்-நல்லூர், 29. ரி. அதியமான்-புத்தூர், 30 எஸ் சந்திராதேவி - வண்ணார்பண்ணை 31 எம். எம். ஜாசப்-சுண்டுக்குளி, 32. ஜி. கனகரத்தினம் - கொக்குவில், 33 எம் மகேஸ்வரராஜா- ஆனைப்பந்தி, 34. கே. மாலினி-நாரந்தனை, 35. எம். பரமநாதன் - கல்விளங்காடு, 36. கே. இ. பிரபாகரன்-திருநெல்வேலி, 37. எஸ் ரவீந்திரன்-யாழ்ப்பாணம், 38. கே. சுமதி-புளியங்கூடல், 39 ஜே. தர்சினி-கோண்டாவில், 40. என். வசந்தினி-நயினுதீவு.

**விவசாயம்**

1 ரி. ஜெயராகவன்—யாழ்ப்பாணம், 2. எஸ். சிவதரன் — கோண்டாவில் 3 ஆர். சுகிதனன்—அத்தியடி.

**பௌதிக விஞ்ஞானம்**

1 எஸ் அருளபரம்—யாழ்ப்பாணம், 2 கே. பரத்மோகன் — திருநெல்வேலி, 3 எஸ் கிருபானந்தன் — கொக்குவில், 4 ஐ. கோமதி — கோப்பாய் 5. எஸ். மணிவண்ணன் — கந்தர்மடம், 6. எம். நந்தகுமார்— திருநெல்வேலி, 7. சி. ராஜ்மோகன் — கந்தர்மடம் 8. கே. சிவரத்தினம் — நல்லூர், 9. எஸ் ஸ்ரீநாத் — திருநெல்வேலி, 0. ரி. தர்மசெரூபன் — திருநெல்வேலி.

**மருத்துவம்**

1. எஸ் அஜந்தா — வண்ணார்பண்ணை, 2. வி. அருட்குமார் — திருநெல்வேலி, 3. எம். ஜி.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1. R. S. Pathy Marunthu**

இது தலைவலி, ஜலதோஷம், காய்ச்சல், கைகால் உளைவு, வலி, குத்து, நோவு வாதம், வேதனை முதலியவைகளுக்குச் சிறந்தது.

விலை: சின்னபோத்தல் 8/-
பெரியபோத்தல் 16/-

தயாரிப்பு:-
**ஆர். எஸ். பதி அன் கோ, மதுரை**
கிடைக்கும் இடம்:-
**க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
**5(76), பெரியகடை, யாழ்ப்பாணம்.**

# உதயன்

01 - 08 - 1988 திங்கட்கிழமை

**KAILAS Kalnar Tooth Powder**

**2. கைலாஸ் கல்நார் பற்பொடி**

இப்பற்பொடியை தினமும் பாவித்து வந்தால் பல்வலி, முரசுகரைதல் வாய் நாற்றம், பல்அரணை, பல்கூச்சம், பல்ஆட்டம், பல்சிழ்வடிதல் முதலிய பல்வியாதிகளும் குணமாகும்.

விலை: 1 பக்கற் 1/-
**க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
**5(76), பெரியகடை, யாழ்ப்பாணம்.**

## ஜே. வி. பி----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பித்தனர் என்றும் - அப்போது இருதரப்பினருக்கும் இடையே கைகலப்பு மூண்டு, கடும் மோதலாக மாறியதாகவும் ஏஜன்சிச் செய்திகள் அறிவித்தன.

### தெற்கில்

இதேவேளை—

தென் மாகாணத்தில் மூன்று மாவட்டங்களில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை நீக்கப்பட்டது.

பாதுகாப்புப் படையினர் தென் மாகாணத்தில் எடுத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் ஓரளவே வெற்றியடைந்தன என்று பி.பி.ஸி. வானொலி அறிவித்தது. (அ-எ)

## பிடித்து ....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிடம் அவரது வீட்டிற்கு வந்த அமைதிப் படையினரால் தெரிவிக்கப் பட்டது.

முகாமுக்குச் சென்ற போது, சடந்த இரு நாட்களாக ஊரடங்கு அமுலில் இருந்த காரணத்தால் சடலத்தை கையளிக்க முடியாமல் போனதாகவும்-

சடலம் எரிக்கப்பட்டு "அஸ்தி" எடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும்-

அதனை எடுத்து செல்லுமாறு கூறப்பட்டதாகவும் தெரியவந்தது.

திரு கணேஸ் இறந்த செய்தி அச்சுவேலியில் பரவியதும் கடைகளும், தொழில் நிலையங்களும் பூட்டப்பட்டுத் துக்கம் கொண்டாடப்பட்டது. [ஓ-119]

## முச்சக்----

இழந்தவர்கள், மற்றும் போலியோ நோயால் பாதிக்கப் பட்டவர்கள் ஜெய்ப்பூர் கால்களைப் பொருத்திக் கொள்ளலாம்.

அதேவேளை இரண்டு கால்களையும் இழந்தவர்களுக்கே இந்த முச்சக்கர வண்டிகளை வழங்கவுள்ளோம்.

இதைப் பெறத் தகுதியுள்ளவர்கள் உடனடியாக விண்ணப்பங்களை அனுப்பலாம்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஓ-சு)

## பல்கலைக்....

கல்லூரி ஆகிய 5 நிலையங்களிலும் இவ்வகுப்புக்கள் இன்று ஆரம்பமாகின்றன.

ஆறு மாதம் நடைபெறும் இப் பயிற்சி நெறிக்குக் கடிதங்கள் கிடைத்த மாணவர்கள் தங்கள் நிரந்தர வதிவிடத்திற்கு அருகாமையிலுள்ள பயிற்சி நிலையத்திற்குச் செல்லலாம் என கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-5)

## வடமரா....

குதல் அதைத் தொடர்ந்து இடம்பெற்ற பதில் தாக்குதல் என்பவற்றின் போது ஏற்பட்ட துப்பாக்கி, கிறனேட், ஷெல் சத்தங்களே அவை எனத் தெரிய வருகிறது

எனினும் இச்சம்பவத்தின்போது சேதம் எதுவும் உண்டானதா என்பது குறித்துத் தகவல் கிடைக்கவில்லை.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து முகாமை அண்டிய பகுதிகளில் இருந்து பலர் கைது செய்யப்பட்டனர்.

உடுப்பிட்டியைப் போலவே நெல்லியடியிலும் வெள்ளிக்கிழமை அதிகாலை பலத்த சத்தங்கள் கேட்டன, அங்குள்ள படை முகாமின் மீது தாக்குதல் நடத்தப் பட்டதாகவும், பதில் தாக்குதல் இடம் பெற்றதாகவும் அறிய வந்தது (அ-160)

### 70 வன்செயல்கள்

வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் சுமார் 70 வன்செயல்கள் நாட்டில் இடம் பெற்றன என்று அறிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

## பன்றியின் இருதய----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய கண்டுபிடிப்புப் ...ற்றி ஆராய்ச்சி நடத்...ய நிபுணர் குழுவைச் ...ர்ந்த டாக்டர் மைக் ...ல் பியுரிக் சொன்னதா ...து:

...எல்லாம் சரியானபடி ...டந்தால், பன்றியின் இருதயம், ஈரல், சிறு...ரகம் ஆகியவற்றை ...னிதனுக்கு அடுத்த ...ன்று ஆண்டுகளுக்குள் ...பாருத்தக்கூடிய நிலைமை ஏற்பட முடியும்.

பபூன், சிம்பன்ஸி இன குரங்குகளின் உறுப்புக்களை மனிதனுக்குப் பொருத்துவதற்காக முன்னர் நடத்தப் பட்ட பரிசோதனைகள் தோல்வியில் முடிவடைந்தன.

மனிதனுக்கு உறுப்புக்களைத் தானம் செய்யக் கூடிய தகுதியான மிருகமாசப் பன்றி கருதப் படுகின்றது என்றும் டாக்டர் மைக்கல் பியுரிக்தெரிவித்தார், (ஓ-எ)

## ஊரடங்கு அமுல்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டங்கு இல்லை என நினைத்து வெளியில் நடமாடிய பலர் அமைதிப் படையின் இம்சைக்கு உள்ளாகினராம்.

மேலும் கிராமங்களில் வசிக்கும் பலர் ஊரடங்கு பற்றிய தகவல்களை அறிவதற்காக பிரதான வீதிப் பகுதிகளுக்கு வந்தபோது அமைதிப்படையினரால் தாக்கப்பட்டனராம்.

பின்னர் ஞாயிறன்று காலையில் ஊரடங்கு தளர்த்தப்பட்டதும் உரிய விதத்தில் அறிவிக்கப்படவில்லை. இதன் காரணமாக அதிகாலையில் 6 மணிக்கு ஊரடங்கு விலக்கிக் கொள்ளப்பட்டாலும் பலர் விஷயம் தெரியாமல் உள்ளே இருக்க வேண்டியதாயிற்று.

அதிலும் சில அமைதிப்படையினருக்கும்கூட ஊரடங்கு விலக்கப்பட்டது பற்றி மேலிடத்தால் அறிவிக்கப்படவில்லை. இதனால் ஞாயிற்றுக்கிழமை காலையில் வீதிக்கு வந்தவர்களை அமைதிப்படை ஜவான்கள் தடுத்தனராம்.

ஊரடங்கு அமுல் சம்பந்தமாக அமைதிப் படை முகாம்களுக்கு இடையிலேயே சீரான, ஒழுங்கான தகவல் பரிவர்த்தனை இல்லாததால் மக்கள் வேண்டாத கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்ததாகவும் கூறப் பட்டது. (ஓ-9)

**03-08-88 புதன்கிழமையன்று**
**சனி, ஞாயிறு நேர அட்டவணைப்படி**
**89 & 90 A/L**
**வகுப்புக்கள்யாவும் நடைபெறும்**
**NEW MASTER Institute**
**B. M. C. Lane, 241, Navalar Road, JAFFNA.** (C 5983)

## அறிவித்தல்

யூலை 30 ஆம் திகதி நடைபெற இருந்த திருமணம் ஊரடங்குச் சட்டத்தின் காரணமாக ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி புதன் கிழமை காலை 8-00 மணிக்கு அழைப்பிதழில் முன் அறிவித்தபடியே சுண்டுக்குளி சென். ஜோன்ஸ் தேவாலயத்தில் நடைபெறும்.

தகவல்:
**இம்மானுவேல் பெர்ணண்டோ**
**அனிற்ரு ராஜசூரியர்**
(5419)

## புதிய.,..

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கணேசமூர்த்தி — யாழ்ப்பாணம், 4. எம். குருபரன் — திருநெல்வேலி, 5. ஐ. சி. இராஜசூரியர்— சுண்டுக்குளி, 6. எஸ். சத்தியவாணி—நல்லூர், 7. எஸ். சுகிர்தா — கோண்டாவில், 8. எஸ். வத்சலா — நீர்வேலி, 9. எம். யோகநாயகம்— யாழ்ப்பாணம்.

**அளவை மதிப்பீடு**
**Quantity Surveying**

1. ஆர். சிவசபேசன் - கோப்பாய்,

**மிருக வைத்தியத்துறை**

1. இ. பி. பாக்கியராஜா —திருநெல்வேலி.

**சட்டத்துறை**

1. எஸ். ஏ. கிளாட்ஸ்டோன் — யாழ்ப்பாணம், 2. எம். எம். முகமது நபீஸ் — கண்டி. (சு)

(தொடரும்)

## திருக்குறள்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

படவேண்டியது.

சுன்னாகம் அம்பேத்கார் சனசமூக நிலையத்தினர் இரண்டாவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தும் அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனையை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் தொழிலதிபர் திரு. க. கனகராசா மேற்கண்டவாறு கூறினார். (இ-27)

**ROGMAN**
**பிரதான வீதி சித்தன்கேணி,**
**89 A/L 90**
காலை 8-00 காலை 9-00
**பொருளியல்**
**S. வரதராஜன்,** B.A. (Hons)
**ஆரம்பம்: இன்று (01 08-88) திங்கள்**
(ஏனைய பாடங்கள் பிரபல்யமிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.)
**O/L88** DAY CLASS EVENING CLASS
**ஆரம்பம்: இன்று (01-08-88) திங்கள்**
[நவராஜாஸ் கல்விநிலையம் பெயர் மாற்றப் பட்டு கணித ஆசிரியர் நவராஜாவினால் நடாத்தப்படுகின்றது.] (5558)

## வேலுப்பிள்ளை இராமாசிப்பிள்ளை

நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த வே. இராமாசிப்பிள்ளை 29-7-88இல் யாழ்ப்பணத்தில் காலமானுர். அன்னார் அம்பலவாணர் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், செட்டியார் எனப்படும் பெரியதம்பி, சேதுப்பிள்ளை, வள்ளியம்மை ஆகியோரின் தாயாரும், கந்தையா, சின்னம்மா, நாகம்மா திருநாவுக்கரசு (அயன்ஸ் ஸ்ரோஸ் மன்னார்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருநாவுக்கரசு, தம்பிஐயா, நாகமுத்து ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 54/9, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து இன்று இரண்டு மணியளவில் துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

(5421) தகவல்: **ஐ. திருநாவுக்கரசு**

## திரு. வயிரமுத்து தாமோதரம்பிள்ளை (கற்கண்டு)

சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சுளிபுரத்தில் வசித்தவருமான திரு. வயிரமுத்து தாமோதரம்பிள்ளை (கற்கண்டு) அவர்கள் 29. 07. 88 வெள்ளிக்கிழமை காலமானுர். அன்னார் திருமதி மரிமுத்துவின் அன்புக் கணவரும், சாந்தாதேவி, Dr. சிவஞானம் (U. K) சற்குணதேவி, சீதாதேவி, (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. பொ. நாகரத்தினம் (ஆசிரியர் விக்ரோறியா கல்லூரி), திரு. த. கிருஷ்ணபிள்ளை (இலங்கை புகையிரத திணைக்களம் K. K. S) திரு. தி. சிவஞானம் (கனடா) ராஜரதி (U. K) ஆகியோரின் மாமனுரும், கிருபானந்தன், அரவிந்தன், லவன், சேந்தன், ஜெயசீலன், யோகரஞ்சினி, ஹரிஸ்குமார் ஆகியோரின் பேரனுருமாவர். இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**த. கிருஷ்ணபிள்ளை**
காமுவன்,
சுளிபுரம். (5565)

## செல்லத்துரை சிறிக்காந்தா (கணக்காளர்)

வட்டு கிழக்கு சித்தங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. செ. சிறிக்காந்தா (உரிமையாளர் பம்பிவட்டானு தோட்டம் உடப்பு) 27. 07. 88 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு. A.S.K செல்லத்துரை, நாகரட்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு. கந்தசாமி. புஷ்பாஞ்சலி, செந்தில்நாதன், அருணகிரிநாதன், பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் இரத்தினபூபதி. Dr. முருகேசம்பிள்ளை, மீனலோஜனி, ரமணி, சடாச்சரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் 28. 07. 88 அன்று உடப்பு மயானத்தில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. செந்தில் நாதன்
"வேல் வாசா"
வட்டு கிழக்கு,
சித்தங்கேணி. (5570)

## ஸ்ரீமதி ஷண்முகரத்தினம் கனகமுத்து

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த ஸ்ரீமதி ஷண்முகரத்தினம் கனகமுத்து காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற ஆ. இ. ஷண்முகரத்தினம் (அதிபர் பலாலி ஆசிரிய கலாசாலை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஸ்ரீ. ச. சுப்பையா (பிறப்பு. இறப்பு விவாகப் பதிவாளர்), ஸ்ரீமதி சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையாவின் சகோதரியும், காலஞ்சென்ற சுந்தரேசன், குமரேசன் (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய காலாசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவபாக்கியத்தின் அன்பு மாமியாரும் சிவநந்தினி, புரந்தரன், பாலஷண்முகன் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார், அன்னாரின் ஈமக்கிரியைகள் மணியகாரன் ஒழுங்கையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக 1-8-88 (திங்கட்கிழமை) பி. ப. 1 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:
**ஷண்முக. குமரேசன் (மகன்)**
[5422]

## செல்வி ஜெயந்தி ஜெயரத்தினம்

செல்வி ஜெயந்தி ஜெயரத்தினம் 31-7-88 இல் காலமாகிவிட்டார்.

இவர் உடுவிலைச் சேர்ந்த திரு V.K.ஜெயரத்தினம் (சாரதி இ.போ.ச., காரைநகர்), திருமதி மகிழ்மலர் ஜெயரத்தினம் ஆகியோரின் அன்பு மகளும், ஜெயமோகன் (கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி, H.N.D.A 1 ஆம் வருட மாணவன்), ஜெயபாஸ்கரன் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தங்கையும், உடுவில் மகளிர் பாடசாலை உயர் வகுப்பு மாணவியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் உடுவில் இராமலிங்கம் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில்இருந்து 1-8-88 திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நல்லடக்கத்துக்காக மல்வம் தென்னிந்திய திருச்சபை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், பாடசாலை நண்பர்கள் ஆகியோர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **தகப்பனுர்,**
V. K. ஜெயரத்தினம்,
உடுவில். (5572)

# மரண அறிவித்தல்கள்

## திரு. அந்தோனிப்பிள்ளை சவிரிமுத்து

திரு. அந்தோனிப்பிள்ளை சவிரிமுத்து (Retired Head Guard Railway) 29. 07. 88 இல் காலமானுர். இவர் திருமதி செல்லம்மாவின் அன்புக் கணவரும், திருமதி புவனேஸ்வரி சுவாம்பிள்ளை, திருமதி எல்வின் சைமன்பிள்ளை (கனடா) காலஞ்சென்ற திருமதி வேஜினி சேவியரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திருமதி C. செல்லம், காலஞ்சென்ற திரு ராசையா, திருமதி J. ராசமணி காலஞ்சென்ற திரு. சின்னத்துரை அவர்களின் மூத்த அன்புச் சகோதரரும் திரு V A. சுவாம்பிள்ளை (Retired Head Guard - Railway) காலஞ்சென்ற S. சைமன் பிள்ளை (X-Works Manager Brown's Group) திரு. S. F. சேவியர் (Teacher St Patricks College) ஆகியோரின் அன்பு மாமனுரும், கனடாவில் வசிக்கும் திரு. அஞ்சலோ, திரு. கியூகோ, திருமதி சாந்தி அன்ரன், திரு. பிறிற்ரோ, திருமதி வசந்தி யேசுதாசன், திருமதி யசிந்தா இம்மானுவேல், திருமதி விஜேதினி யேசுதாசன் திரு. லியோ, திருமதி பெலின்டா பரமானந்தன் (கொழும்பு) கனடாவில் வசிக்கும் திரு. றஜன்யோ, திரு. புறாநோ, திரு. ஜெராட் திரு. குளோட், திரு. றொனுட் (Dubai) திருமதி டியூபா வேதராஜா (U. K) திரு. எவருட் (U. S. A) திருமதி R. வேணி (ஜேர்மனி) செல்வி செறின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் மரணச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: V. A. சுவாம்பிள்ளை
48, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (5567)

## மரியாம்பிள்ளை மரியநாயகம்

(ஓய்வு பெற்ற பிரதம இலிகிதர் அரசாங்க வைத்தியசாலை)

கரம்பன் மேற்கைச் சேர்ந்த மரியாம்பிள்ளை மரியநாயகம் (ஓய்வு பெற்ற பிரதம இலிகிதர் அரசாங்க வைத்தியசாலை) மாரடைப்பினுல் 28. 07. 88 அன்று காலமானுர். இவர் மேரி யோசப்பினின் அன்புக் கணவரும், ஸ்ரெல்லா, றெக்ஸிஸ் (சவூதி), சில்விக்ஸ், எட்வேட் (பொறியியலாளர் சீமெந்துக் கூட்டுத்தாபனம்) ஜெஸி (பொறியியலாளர் அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சில்வெஸ்ரர் லிங்கறட்ணம் (லிகிதர் சிமெந்துக் கூட்டுத்தாபனம்) யொறின், எட்வின் (ஓமான்) ரேஜினி, மனோசெபறட்ணம் (பொறியியலாளர் அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனுரும், லெனி, B (பெனி), எமி. லிபி, லெனெக்ஸ், சஜீவ், (C) கிசான், ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 30. 07. 88 மாலை 3மணிக்கு ஊர்காவற்றுறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மருமகன்
சில்வெஸ்ரர் லிங்கரட்ணம்
கரம்பன் மேற்கு,
ஊர்காவற்றுறை. (5571)

## திரு. பசுபதிப்பிள்ளை முதலித்தம்பி

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பசுபதிப்பிள்ளை முதலித்தம்பி 29-7-88 இல் காலமானுர். இவர் கொழும்பு கொம்பனித்தெரு முன்னுள் பிரபல வர்த்தகரும், பத்மாவதியின் அன்புக் கணவரும், சண்முகநாதன் (நூலக அதிகாரி, வவுனியா) சத்தியபாமா (ந/புங்/ப.நோ.கூ.ச), சிவநாதன் (இலங்கை கடற்படை பொறியியலாளர்), சத்தியவதனு (அரசினர் வைத்தியசாலை, ஊர்காவற்றுறை), சத்தியரூபி, சுஜாதா ஆகியோரின் அன்புத் தந்தையும். சுகிர்தா (ஆசிரியை, வவுனியா), வீரசிங்கம் [A.C.A.S. அலுவலகம், வவுனியா] ஆகியோரின் அன்பு மாமனும், திருமதி செல்லப்பா இரத்தினம், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காராளபிள்ளை [அஞ்சல் அலுவலகம், புங்குடுதீவு), அரியரெத்தினம் (புகையிரத தலைமைப் பொறுப்பாளர் அனுராதபுரம்.] காலஞ்சென்றவர்களான திருமதி சின்னத்துரை தையல்நாயகி, பரநிருபசிங்கம் [முன்னுள் ப. நோ. கூ. ச. வவுனியா] ஆகியோரின் மைத்துனரும், சுரேஸ், சுமதி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை 30-7-88 இல் மணற்காடு மயானத்தில் நடைபெற்றது. இத்தகவலை உற்ருர், உறவினர், நண்பர்கள், ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
**பரமேஸ்வரன்**
[5420]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 01-08-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Monday 01st August 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org